

ஆத்மஜோதி
பிரசுரம்
நிழலின்
பின்னே
ர்த்திகையா
நாவலப்பிட்டி - இலங்கை

உ
சிவமயம்

# நிழலின்
# பின்னே
# மனிதன்

ஆசிரியர்
நா. முத்தையா

❋❋

வெளியீடு
ஆத்மஜோதி நிலையம்
நாவலப்பிட்டி.
(இலங்கை)

முதற் பதிப்பு

டிசம்பர் 1982

விலை ரூபா:

# முன்னுரை

''ஊனத் திருணீங் கிடவேண்டில்
ஞானப் பொருள் கொண்டடிபேணும்
தேனைத் தினியா னமருஞ்சேர்
வானம் மயிலாடு துறையே'' -சம்பந்தர்

உயிர்களை அணுவாக்குந்தன்மை ஆணவ மலத்திற்கு உண்டாகலின் ஆணவம் என்று பெயர் வந்தது. ஆணவ மலம் நீங்கவேண்டினால் ஞானப்பொருளைத் துணையாகக் கொள்ள வேண்டும். ஊனத்து இருள் என்றால் குறைபாட்டை உண்டாக்கும் மலம். குறைபாடாவது சிவத்தோடொன்றிச் சிவமாகும் ஆன்மாவை மறைத்து அணுவாக்கும் குறைபாடு. தேன் ஒத்து இனியான் என்றால் முத்தியில் ஒன்றிய காலத்தில் தேனை ஒத்து இனியவன் என்பது பொருள். 'தேனைப் பாலை யொத்திருப்பன் முத்தியினிற் கலந்தே'' என்றும் கூறுவார்.

ஆன்மா குருவை அடைந்து பக்குவம் பெறும் வரை பல தடைகளைத்தாண்டி ஆகவேண்டும். இத்தடைகளை மலம் என்றும் அறியாமை என்றும் இருள் என்றும் ஆணவம் என்றும் இப்படிப் பல பெயர்களால் அழைப்பர். இந்த இருள் நீங்கவேண்டின் இறைவன் திரு அருள் அவசியம் வேண்டும். திருவருளே குருவாக வந்து அருள் புரிகிறது. குரு என்றாலே இருட்டை நீக்குகிறவர் என்பதுதான் பொருள்.

இருட்டில் இரண்டுவகை. ஒன்று பூத இருள், அடுத்தது அக இருள். பூத இருளை சூரியன், சந்திரன், அக்கினி, ஓசை ஆகிய நான்கும் நீக்கும். அக இருளை குருவின் கிருபையால் மாத்திரமே நீக்கமுடியும். குருவின் அருள் கிடைத்தால் தான் முத்தி உண்டு. நல்வினை, தீவினை இரண்டும் பிறப்பிற்கு

வித்தானவையே. தீவினை இரும்பு விலங்கு; நல்வினை பொன் விலங்கு. இரும்பானாலும் பொன் ஆனாலும் விலங்கு விலங்கே தான்

"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு."

என்கிறார் வள்ளுவர்.

இறைவன் எல்லா உயிர்களுக்கும் தந்தை; அதனால் வேண்டுதல் வேண்டாமை இல்லாமல் எல்லாரையும் சமமாகக் கருதிக் காக்கிறான். அந்தப் பெரும்புகழை உணர்ந்து அவனை வணங்குகிறவர்களை அஞ்ஞானத்தால் வருகிற நல்வினை தீவினை என்னும் இரண்டு வினைகளும் தொடமாட்டா. விருப்பு, வெறுப்பு என்ற அஞ்ஞானத்திலிருந்துதான் நல்வினை தீவினை என்ற இரண்டு வினைகளும் தொடர்கின்றன. விருப்பு வெறுப்பு இல்லாததால் தான் இறைவன் ஞானமயமாக விளங்குகிறான். ஆகையினால் அந்த ஞானத்தை அனுபவிக்க நாமும் விருப்பு வெறுப்புகளை விலக்கி இறைவனை வணங்க வேண்டும்.

விருப்பு வெறுப்புகளை விலக்குவதற்கு அவற்றிற்கு காரணமான பஞ்சேந்திரிய ஆசைகளைக் குறைக்க வேண்டும். பஞ்சேந்திரிய ஆசைகள் என்பதே இல்லாத இயல்பினன் பகவான். நமக்கு ஒரு மனக்கவலை வந்தால் அதைப்போக்கிக் கொள்ள நம்மைக்காட்டிலும் சிறந்தவனை வேறு ஒருவனிடம் போகிறோம். அவன் காலில் விழுந்து கூடக் கேட்டுக் கொள்ளுகிறோம் அவனால் அது முடியவில்லையானால் அவனைக்காட்டிலும் சிறந்தவனென்று இன்னொருவனிடம் அடைக்கலம் புகுகின்றோம். இப்படிப் பலரிடத்தில் சென்றும் நம் மனக்கவலை நீங்காதபோது இந்த எல்லாருக்கும் மேலாக அவனுக்கு மேல் எவரும் இல்லாதவனை இறைவனிடத்தில் சரணாகதி அடைந்தால் தான் அந்த மனக்கவலை மாறும்.

வீடு, மாளிகை, கோட்டை, கொத்தளமெல்லாம் மிக அழகாகத்தான் இருக்கின்றன. இவையாவும் நிலையல்ல ஒன்று கூட இறுதியில் உடன் வராது. எல்லாம் அழிந்துபோகும். எல்லாமே சாரமற்றவை. பொன், பொருள், அழகு, உடல், சொத்து எல்லாமே துன்பச் சுழலில் சிக்கவைப்பவை. உலகம் முழுவதிலும் செல்வாக்கு ஓங்கி வளர்ந்தாலும் ஒரு நாமம் இல்லாதவனின் திருநாமத்தைச் சிந்தித்தவண்ணம் இருந்தாலும் தலை மீது காலதேவன் காத்திருக்கிறான். ஒரு நாள் முடிவு வரும். சீவன் பிரிந்து போகும். கெடுதி, கொடுமை புரிபவர்களின் நிலைமை என்ன ஆகும்? எல்லோரும் மண்ணோடு மண்ணாகி, இறுதியில் மண்ணோடு கலக்கிறார்கள். வீடு, வாசல், உற்றம், சுற்றம் சொத்து சகலத்தையும் விட்டுச் சென்று விடுகிறார்கள். உலக வாழ்வில் திளைப்பவர்கள் இறைவன் திருநாமத்தை மறந்து விடுகிறார்கள். உலக வாழ்வில் நாட்டம் கொண்டவர்கள் வெந்து மாய்கிறார்கள். பவக்கடலில் மூழ்கி மடிகிறார்கள். குருவை அண்டியவர்களோ இலகுவாகப் பிறவிக்கடலைக் கடந்து விடுகிறார்கள்.

மாயை மாயை என்று சொல்லியே செத்தார்கள், இறுதிக் காலத்தில் மாயை எவருக்கும் துணைவரவில்லை. ஆத்மா அன்னம்போல் பறந்துபோகிறது. மாயை இங்கேயே இருந்து விடுகிறது. நற்குணங்கள் உடனிருந்தால் மாயையினின்றும் விலகலாம். இறை நாம சிந்தனை இல்லாது துன்பத்தை தேடிக் கொள்கிறார்கள்.

இந்த நூலின் ஒரே ஒரு நோக்கம் மக்கள் எல்லோரும் உறுதிப்பொருளை நாட வேண்டும் என்பதுதான். இறை சிந்தனை ஒன்றினாலேதான் மனிதவாழ்வு உயரும். இந்த நூலுக்கு பல வேலைகளுக்கு மத்தியிலும் நன்கு மனதூன்றிப் படித்து அணிந்துரை அளித்த அருள்மொழியரசு திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றியைச் செலுத்துகின்றோம்.

நா. முத்தையா

ஆத்மஜோதி நிலையம்
நாவலப்பிட்டி.
1-12-82.

உ
முருகா

# அணிந்துரை

செம்பு என்று உண்டோ அன்றே அதில் களிம்பும் உண்டு. அரிசி என்று உண்டோ அன்றே அதில் தவிடும் உண்டு. அதுபோல் ஆன்மா என்று உண்டோ அன்றே ஆணவமலம் உண்டு. அதனால் அதற்கு சகஜ மலம், மூலமலம் என்ற பெயர்கள் உண்டு.

தாம்பரத்தில் களிம்பு நீங்கினால் அது தங்கமாகும். சீவனிடத்தில் உள்ள ஆணவம் நீங்கினால் சீவன் சிவமாகும்.

இந்த தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு நாவலப்பிட்டி ஆத்மஜோதி ஆசிரியரும், சிவநெறிச் செம்மலும் ஆகிய என் அன்பர் நா. முத்தையா அவர்கள் "நிழலின் பின்னே மனிதன்" என்ற கட்டுரையை அழகாக எழுதியிருக்கிறார். கட்டுரை விறுவிறுப்பாகவும், உணர்ச்சியூட்டும் நடையுடனும் நன்கு சொல் நடை, பொருள் நடை, பொலிய விளங்குகின்றது.

அன்பர்கள் அனைவரும் படித்து மகிழ்வார்களாக.

நேரிசை வெண்பா

*தூய புகழ்ஆத்ம ஜோதிமுத் தைய்யவேள்*
*ஆய நிழலதனை ஆராய்ந்து - நேயமுடன்*
*கன்னலெனச் செந்தமிழால் கட்டுரையை ஈந்தனனால்*
*நன்னலமாய் வாழ்க நயந்து.*

அன்பன்
கிருபானந்தவாரி

# நிழலின் பின்னே மனிதன்

## நிழலும் மனிதனும்

காசினியில் ஒரு மனிதன். அவனுக்குத் தனது நிழலைக்கண்டால் பயம். அதனால் அதன்மேல் ஒரு வெறுப்பு. இடைவிடாது தன்னையே அது தொடர்ந்து வருவதை அவதானித்தான். சில சந்தர்ப்பங்களில் தனது நிழலைக்கண்டு பேயோபூதமோ என்று பயந்தான்.

"அஞ்சினவன் கண்ணுக்கு ஆகாயமெல்லாம் பேய்" என்ற பழமொழி இவன் வாழ்க்கையில் நூற்றுக்கு நூறு சரியாகக் காணப்பட்டது. இதனால் வெளிச்சம் உள்ள இடத்திற்குப் போக அஞ்சினான். வெளிச்சம் இருப்பதால் தானே தன்னை நிழல் தொடருகிறது என்று எண்ணினான். பகலில் சூரியனைக் கண்டு மருண்டான். இரவில் சந்திரனைக் கண்டு வெருண்டான். இரவில் சிறு வெளிச்சங்கள் பெரிய நிழலைத் தோற்றுவித்தன. அதனால் அவன் மனது குழம்பியே கிடந்தது.

இதனுல் இருளை விரும்பினுன். சிறிய நிழலுக்குப் பயந்தவன் பெரிய இருளை விரும்பினுன். அங்கு எதைக் கண்டான்? ''அருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்'' என்பதற்கு இலக்கிய புருஷுனுன். இருள் எல்லாம் பெரிய பேயாகக் காணப்பட்டது. இருளாகிய பேய் தன்னை விழுங்கி விடுவது போல கற்பனை செய்தான்.

நான் உலகத்தில் சந்தோசமாக வாழ வேண்டுமானுல் தனது நிழலை ஒழித்தாக வேண்டும் என்று உறுதி பூண்டான். தன்னுடைய நிழலை எப்படியும் குழி தோண்டிப் புதைத்துவிட்டால் தான், தான் நிம்மதியாக வாழ முடியும் என்று நினைத்தான். அதற்கான திட்டங்களை எல்லாம் தீட்டினுன்.

எல்லாரும் படுக்கைக்குச் சென்ற பின்பு, நல்ல இருட்டிலே இரண்டு இரவுகள் தானே மண்வெட்டி கொண்டு ஆழமான குழி ஒன்று வெட்டினுன். அவனது மனத்தில் அது அகழியாகவே காணப்பட்டது. அதனுல் அவனுக்குப் பெரிய சந்தோஷம்.

அடுத்த நாள் காலை தற்செயலாகத் தான் அகழ்ந்த அகழிப்பக்கம் சென்றுன். அவனுடைய நிழல் அகழியினுள்ளே இருப்பதைக் கண்டான். அவனுக்குச் சந்தோசம் தாங்க முடியவில்லை. மிகக் கெதியிலே அவனுடைய திட்டம் இவ்வளவு இலகுவாக நிறைவேறிவிடும் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. சந்தர்ப்பத்தை உடனேயே பயன்படுத்திக் கொண்டான். வீட்டுக்குச் சென்று மண்வெட்டி எடுத்துவர யோசித்தான். அதற்கிடையில் நிழல் ஏமாற்றிவிட்டால் என் செய்வது என்று யோசித்தான்.



''தன் கையே தனக்குதவி'' என்ற பழமொழி நினைவுக்கு வந்தது. தனது இரு கைகளாலும் மேலே உள்ள மண்ணை அகழியினுள் தள்ளினுன். மிகவேகமாக அகழியை மூடும் வேலை நடைபெற்றது. அவன் எதிர்பார்த்ததற்கு முன்பாகவே அகழி மூடப்பட்டு விட்டது. சந்தோஷத்தோடு தூர்க்கப்பட்ட அகழியை நோக்கினுன். என்ன ஆச்சரியம்? எதை அகழியில் மண் கொண்டு மூடினுனே அது மூடிய அகழியின் மேல் நிமிர்ந்து நின்றது. இப்படிப்பட்ட அநியாயம் உலகில் எங்காவது உண்டா? என வாய் விட்டு அலறினுன். வெட்ட வெட்டத் தழைப்பதைப் பற்றிக் கேள்விப்பட்டுள்ளான். சொந்த அனுபவத்திலும் அனுபவித்துள்ளான். மூட மூட வெளியில் வருவது பற்றி இதுதான் அவனுடைய முதல் அனுபவம்.

நிழலை அவ்விடத்திலேயே விட்டு விட்டு மிக வேகமாக ஓடி மறைந்துவிடலாம் என எண்ணினுன். தலை தெறிக்க ஓடினுன், இந்த வேகம் எங்கிருந்து வந்தது? என்று அவனே ஆச்சரியப்பட்டான். கண்களை மூடிக்கொண்டே ஓடியவன் ஆனபடியினுல் நிழல் ஏமாந்துவிட்டது என்று மனதில் ஒரு மகிழ்ச்சி. சூரியனுக்கு எதிர்த்திசையாக ஓடிக்கொண்டிருந்தான். அதாவது சூரியனுக்கு முதுகுப்புறம் இருக்கத்தக்கதாக அவனுடைய ஓட்டம் இருந்தது.

கண்களைத் திறந்தான். என்ன ஆச்சரியம்? தனக்கு முன்னுகவே நிழல் ஓடிக்கொண்டிருப்பதைக் கண்டான். அவனுக்குக் கோபம் தலைக்கு மேலே வந்தது. அடைந்த கோபாவேசத்தினுல் முன்னிலும் வேகத்தை அதிகரித்தான். இவன் எவ்வளவுக்கெவ்வளவு வேகத்தை அதிகரித்தானே அவ்வளவுக்கவ்வளவு அதுவும் தனது வேகத்தை அதிகரித்தது. எவ்வளவுக்கெவ்வளவு வேகத்தைக் குறைத்தானே அவ்வளவுக்கவ்வளவு அதுவும் தன் வேகத்தைக் குறைத்

துக்கொண்டது. எப்படியாவது எட்டிப்பிடித்துவிட லாமோ என்று கூடியமட்டும் முயற்சித்தான். முடிய வில்லை. ஓடிய வேகத்தைக் குறைத்தான். படிப்படி யாகக் குறைத்துக் கடைசியாக ஓரிடத்திலே நின்று விட்டான். அதுவும் அந்த இடத்திலேயே நின்றது. எட்டி ஓரடி வைத்தான். அதுவும் எட்டி ஓரடி வைத் தது. மனம் குழப்பம் அடைந்தது.

அதனைப் பார்க்கவே அஞ்சினான். எதிர்த்திசை யாகத் திரும்பினான். அதாவது சூரியன் இருக்கும் திசையைப் பார்த்தவண்ணம் ஓடினான். மிக வேக மாக ஓடினான். முன்னாலே நிழலைக் காணவில்லை. நிழலை ஏமாற்றிவிட்டதாகச் சந்தோஷம் கொண் டான். அதனால் வேகத்தையும் குறைத்துக் கொண் டான்.

பின்னால் திரும்பிப் பார்த்தான். தனக்குப் பின்னே நிழல் தொடருவதைக் கண்டான். தான் ஓடினால் அது ஓடுவதையும் தான் நின்றால் அது நிற் பதையும் அவதானித்தான். அது தனக்குக் கட்டுப் பட்டுவிட்டதாக உணர்ந்தான். இதனால் மகிழ்வு கொண்டான். இப்போ அது தனது அடிமையாகி விட்டது என்பது அவனுடைய எண்ணம். எஜமா னைத் தொடர்ந்து அவன் வளர்த்த நாய் பின் தொடர் வது போன்ற ஒரு எண்ணம் அவன் மனதில் உதித் தது.

இந்தப் பந்தய ஓட்டத்தில் பொழுதும் மேல் ஏறிக்கொண்டிருந்தது. பொழுதும் தலைக்கு நேராக வந்துவிட்டது. நிழலைப் பார்த்தான். காலடியிலே கிடந்தது. நாய் எஜமானின் காலடியிலே படுத்துக் கிடப்பது போல அதுவும் கிடக்கிறதே என்று உணர்ந்தான். தன்னுடைய காலடியிலே தன்னு டைய வழிக்கு வந்துவிட்டதாக நினைவு அடிமையாக



வந்துவிட்டதே தவிர அதனை ஒழித்துவிட முடிய வில்லையே என்ற கவலை மறுபடியும் தலைதூக்கியது.

இறுதியில் ஆகாயத்தை நோக்கிய வண்ணம் அவன் கீழே படுத்துக் கொண்டான். நிழலைப் பார்த் தான் காணவில்லை. வலது பக்கமாகவும், இடது பக்கமாகவும் திரும்பித் திரும்பிப் பார்த்தான். நிழ லைத்தான் தன் கீழ் மறைத்துக்கொண்டானே. தான் நிழலை வெற்றி கொண்டுவிட்டதான எண்ணத்துடன் அமைதியாக உறங்கலானான்.

## ஆணவ நிழல்

இதே போல் தான் 'நான்', 'எனது' என்னும் நிழல்கள் மனிதனை இடைவிடாது பின்தொடர்ந்து செல்கின்றன. சாதகன் செய்யும் சாதனைகளுக்கெல் லாம் மேலாக ஆணவம் தலைதூக்கி நிற்கிறது. அதை விடுத்து அவன் ஓட நினைக்கிற போதெல்லாம் அவ னுக்கு முன்னதாக அது செல்ல முனைகிறது. கல்விச் செருக்கு, தவச்செருக்கு, சந்நியாசச்செருக்கு, தொண்டாற்றும் கர்வம், பதவிச்செருக்கு, பணச் செருக்கு முதலிய பல உருவங்களை ஆணவம் மேற் கொண்டு காட்சி அளிக்கின்றது. அவன் கடவுளை நோக்கி ஓடத்துவங்கினால் இந்த ஆணவம் பின்னால் சென்று விடுகிறது. அவன் ஆண்டவனிடம் பரி பூரணசரணாகதி அடைந்த நிலையில் அது முற்றிலும் மறைந்து விடுகிறது.

நிழல் என்பதற்கு இருள் என்றும் பொருள் உண்டு. ஒளியின் இயல்பு வெப்பமும் வெளிச்சமும் போல இருளின் இயல்பு தண்மையும் இருளுமாகும். 'நான்', 'எனது' என்ற வெப்பத்தால் தாக்கப்படும் போது இறைவனது திருவடி நிழல் தஞ்சம் கொடுக்கிறது. வெயிலில் வாடுகிறவனைப் பார்த்து நிழலுக்குப்போ என்று யாரும் சொல்ல வேண்டியதில்லை.

*''தாநிழல் ஆர்தற்கு ஆருஞ் சொல்லார் தொகுமிதுபோற்*
*றானது வாய் நிற்குந்தரம்''*

என்பது திருவருட்பயன்.

வெயிலால் வருந்தினோன் நிழலைக் காணும் போது தானாக அந்நிழலை மிகுந்த ஆசையோடு அடைவதுபோல, மலங்களின் துன்பங்களால் வருந்தினோன் பேரின்பத்தைத் தருவதாகிய திருவருளைக் காணும்போது தானாகவே பெருமகிழ்ச்சியோடு அதனைச் சேருவான்.

இருபத்தைந்து ஆண்டுகள் மண்ணுள் புதைந்து கிடந்த வெற்றெலும்பை நாய் கடித்து இன்பம் அடைகின்றது. வெற்றெலும்பைக் கடிக்கும்போது அதன் முரசிலிருந்துதான் இரத்தம் சொட்டி அதனைச் சுவைக்கிறது. எலும்பு தனக்குத் துன்பம் செய்கிறது என்பதை நாய் உணருவதில்லை. அதுபோல மனிதனும் ஆணவம் தனக்குத் துன்பம் செய்கிறது என்பதை உணர்ந்து கொள்வதில்லை.



# பாலைவனத்தில் கண்ட நிழல்

பட்டப்பகலிலே பாலைவனத்திலே மனிதன் ஒருவன் நடக்கிறான். வெயிலின் கொடுமை தாங்கமுடியவில்லை. மணல் நிலம் அடியை வருத்துகின்றது. உச்சிவெயில் முடியை வருத்துகின்றது. இந்நிலையில் அவனது மனம் நிழலை நாடுவது இயல்புதானே. தூரத்திலே பார்த்தான் நிழல் மரம் ஒன்று தெரிந்தது. ஓடிச்சென்றான். கிட்டச் சென்றதும் அது கானல்நீர் என்பதை அறிந்தான். ஆனால் முயற்சியை அவன் கைவிடவில்லை. முயற்சியின்றி இந்த மணலுள் இறப்பதைவிட ஊக்கத்தோடு முன்னேறுவது சிறந்தது என நினைத்தான்.

*''ஆளும் நாயகன் கயிலையில் இருக்கக் கண்டல்லால்*
*மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்''*

என்று கூறிய அப்பரின் வைராக்கியம் அவன் உள்ளத்தில் உதித்தது. கானல் நீர் காட்டிய பல காட்சிகளைக் கண்டபின் உண்மையாகவே ஓர் நிழல் மரத்தை அடைந்தான். ''நிழலின் அருமை வெயிலில் தெரியும்'' என்பார்களே. அதனைச் சொந்தமாக அநுபவித்தான்.

அது என்ன மரம் என்பதையே அவன் அறிய முற்படவில்லை. நிழலின் இன்பத்திலே தன்னையே முற்றிலும் இழந்திருந்தான். அநுபவிக்கும் இன்பம் அநுபவிக்கப்படும் பொருளையே மறைத்துவிடுகின்றது. ''காமத்திற்குக் கண் இல்லை'' என்பதும் இப்பொருள் பற்றித்தான் வந்தது போலும்.

அந்த நிழல் அவன் களைப்பைப் போக்கியது. தாகத்திற்குத் தண்ணீர் என உள்ளம் வினவியது?

நல்ல மண் கூசாவில் குளுகுளு என்ற குளிர்ந்த நீர்
இருப்பதைக் கண்டு ஆனந்தமாகப் பருகினான். தண்
ணீர் எப்படி அங்கே வந்தது என்பதை அவன் ஆரா
யவில்லை. தேவையானது தண்ணீர். தீர வேண்டியது
தாகம். இரண்டும் நிறைவேறிவிட்டன. அதற்குமேல்
அவன் ஆராய்ச்சி நிகழ்த்தவில்லை.

''கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகைகிடைத்த
குளிர் தருவே தரு நிழலே நிழல்கனிந்த கனியே
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீரே
உகந்த தண்ணீரிடை மலர்ந்த சுகந்த மண மலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்தினுறும் பயனே''

என்ற அநுபவம் அவனுக்குக் கிடைத்தது. ஆசைக்
கோர் அளவில்லை அல்லவா? பசிதீர உணவு கிடைத்
தால் என்று நினைக்கு முன்பே உணவு அறுசுவை
யோடும் கிடைத்தது. ''உண்டகளை தொண்டர்க்கு
முண்டு'' என்பார்களே, பஞ்சணை மெத்தைக் கட்
டிலை விரும்பினான். பஞ்சணை மெத்தைக் கட்டிலிலே
படுத்துக் கிடந்து அதன் சுகத்தை அநுபவித்துக்
கொண்டிருந்தான். உடம்பு பிடித்துவிடும் சுகத்தை
உள்ளம் நினைத்தது. என்ன ஆச்சரியம் இரு பெண்
கள் உடம்பைப் பிடித்துக்கொண்டிருந்தார்கள்.

மனிதனின் எண்ணம் சுழன்றது. தான் அநுப
வித்த இன்பங்களின் மேலேயே சந்தேகம் எழுந்தது.
தனக்குக் கிடைத்ததெல்லாம் தான் அநுபவித்த
தெல்லாம் உண்மையானவையா? கண்டதெல்லாம்
கனவா? நின்றதெல்லாம் நினைவா? தன்னையே
சோதித்துப்பார்க்க எண்ணினான். இப்போ புலி
ஒன்று வந்தால் என நினைத்த கணப்பொழுதே
புலியும் தோன்றியது. தன் தொழிலையும் செய்து
முடித்துவிட்டது. நல்ல நினைவு நல்லதைச் செய்தது



போலத் தீயதும் தீயதைச் செய்துதானே ஆகவேண்டும். ''மனம் போல மாங்கல்யம்'' என்பது இதனைத் தானே.

இதில் ஒரு இரகசியம். அவன் கற்பகதருவின் நிழலிலே இருந்தான். இது அவனுக்குத் தெரியாது. தெரிந்திருக்க வேண்டிய அவசியமும் ஏற்படவில்லை. கற்பகதருவின் கீழே இருந்து கொண்டு ஒருவன் எதனை நினைக்கிறானோ அதனை அது கொடுக்கிறது. தண்ணீரையும் உணவையும் உறக்கத்தையும் கேட்டான். அவற்றைத் தவறாது கொடுத்த கற்பகதரு புலியைக் கேட்ட போது அதனையும் கொடுத்தது.

நாங்களும் ஒரு கற்பகதருவின் நிழலிலே தான் வாழுகின்றோம். வழிப்போக்கன் மறந்தது போல் நாமும் அக்கற்பகதருவை மறந்து வாழுகின்றோம். மறந்த இடத்து ஆணவம் தலை எடுக்கிறது. அதற்கு அடிமையாகிவிடுகின்றோம்.

''ஆண்டவனே பொன் வேண்டும்; பூமி வேண்டும்; பொருள் வேண்டும்'' என்கிறான் மனிதன். ஆண்டவன் ததாஸ்து என்கிறான். அதாவது அப்படியே ஆகட்டும் என்கின்றான். பொன்னும் பூமியும் பொருளும் இன்னும் கேட்டதெல்லாம் கிடைக்கிறது. மற்றவன் நாசமாய்ப் போகவேண்டும் என்று நினைக்கின்றான். இறைவன் விருப்பு வெறுப்பு அற்றவன். அதற்கும் ததாஸ்து என்கிறான். தீமையை நினைத்தவன் தானே தீமைக்கு ஆளாகின்றான்.

செய்தீவினை இருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்
எய்த வருமோ இருநிதியம்

என்பதற்கு இலக்கியம் ஆகின்றான்;

சூரியனுக்கு முதுகு காட்டிக் கொண்டு ஓடிய மனிதன் நிழலைத் துரத்தினான். அதனைப் பிடிக்க முடியவில்லை. அதுபோலத்தான் இன்றைய மனிதனும் சூரியனாகிய ஆண்டவனுக்கு முதுகு காட்டிக் கொண்டு நிழலாகிய பொன்னையும் பொருளையும் பெண்ணையும் பட்டத்தையும் பதவியையும் துரத்திக் கொண்டு ஓடுகின்றான். இவன் ஓடும் அளவுக்கு அவையும் ஓடிக்கொண்டே இருக்கின்றன. இவனால் அவற்றைப் பிடிக்க முடியவில்லை.

சூரியனை நோக்கி மனிதன் திரும்பிய உடனே நிழல் அவனைத் தொடர்வது போல இறைவனை நோக்கி நாம் திரும்புவோமானால் பொன்னும் பொருளும் எல்லாம் எமது காலடியிலே கிடக்கும். இந்த இரகசியத்தை அறியாத உலகோர் நிழலைத் துரத்திப் பிடிக்கும் ஓட்டப் பந்தயத்தை நடத்திக் கொண்டு வருகின்றார்கள். இந்த ஓட்டப்பந்தயம் இன்று நேற்று ஏற்பட்டதல்ல. உலகந் தோன்றிய காலந் தொட்டு இந்த ஓட்டப் பந்தயம் நடந்து கொண்டே தான் இருக்கிறது. நிழலைப் பின் தொடர்ந்து செல்லும் ஓட்டப் பந்தயம் தான் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. சூரியனாகிய இறைவனை நோக்கி ஓடுவோர் தொகையை விரல்விட்டு எண்ணிவிடலாம்.

# மயிரும் நகமும்

மனிதனுடைய உறுப்புகளிலே இரண்டு உறுப்புகள் உணர்ச்சி அற்றவை. ஒன்று தலை மயிர், அடுத்தது நகம். இன்றைய வாலிபர்கள் உணர்ச்சி அற்ற அந்த இரு உறுப்புகளையும் வளர்த்தால் தான் நாகரிகம் என்று நினைக்கிறார்கள். உணர்ச்சியற்றது



வளர்ந்தால் மனித உணர்வு குன்றத்தானே வேண்டும். அரக்க உணர்வு வளர்ந்தால் மனித உணர்வு குன்றுகிறது. அசுர உணர்வு வளர்ந்தால் தெய்வ உணர்வு குன்றுகிறது. இருள் உணர்வு வளர்ந்தால் ஒளி உணர்வு குன்றுகிறது. ஆகவேதான் இன்றைய மனிதன் நிழலின் பின்னே சென்று இருளில் தன்னை ஆழ்த்திக் கொள்ளுகின்றான். இருளை நோக்கியோ நிழலை நோக்கியோ தனது வாழ்வுப் பாதையை அமைத்துக் கொண்டவன் அஞ்ஞானி ஆகிறான். அதாவது தெரிந்து கொள்ள வேண்டியதைத் தெரிந்து கொள்ளாத வர்க்கத்தைச் சேர்ந்த பேர்வழி ஆகிறான். ஒலியை நோக்குந் தனது வாழ்வுப்பாதையை அமைத்துக் கொண்டவன் ஞானி ஆகிறான். அதாவது தெரிந்து கொள்ள வேண்டியதைத் தெரிந்து கொண்டவன் ஆகிறான்.

உள்ளத்தில் தெளிவு ஏற்படவேண்டும். தெளிவு ஏற்படும் அளவுக்கு ஞானம் உதயமாகிறது. இருள் அகல அகல சூரியன் உதயமாகிறது. "ஞாலத்திருள் நடப்ப" என்றொரு பகுதி நைடதத்தில் வருகிறது. கீழ்த்திசையில் சூரியன் தோன்றும் அளவுக்கு மேற்கே இருள் நடந்து கொண்டிருக்கிறது. "மனத்துக்கண் மாசு இலனாதல் அனைத்து அறன்" என்றார் வள்ளுவர். மன மாசு அகலும் அளவுக்கு உள்ளத்திலே ஞானம் உதிக்கிறது. கண்ணாடியில் தூசிபடிந்துள்ளது. அக்கண்ணாடியில் எமது உருவத்தைப் பார்க்க முடிவதில்லை. துணி கொண்டு கண்ணாடியில் உள்ள தூசியைத் துடைத்த உடனே உருவம் பளிச்சிடுகின்றது. இதே போன்று தான் உள்ளத்து அழுக்கை உண்மை என்னுந் துணி கொண்டு துடைத்த உடனே ஆத்மப்பிரகாசம் உண்டாகிறது. நான் என்ற அகங்காரமலம் ஆத்மாவை மறைத்துள்ளது. ஆணவமலத்தை நீக்கினால் ஆத்மஜோதி உண்டாகும்.

# தேங்காயின் தத்துவம்

தேங்காய்ப் பருப்பாகிய ஆத்மாவை சிரட்டையாகிய அகங்காரம் மூடியுள்ளது. அதனை ஓங்கியடித்தால் சிரட்டை உடைகிறது. சிரட்டை உடைந்த உடனே வெண்மையான பருப்பு தோற்றம் அளிக்கிறது. அகங்காரம் தேய்ந்த உடனே நான் ஆகிய ஆத்மஜோதி பிரகாசிக்கிறது. நான், என்பதில் இரண்டு "நான்" உண்டு. ஒன்று அகங்காரமாகிய நான். அடுத்தது ஆத்மாவாகிய நான். அகங்காரமாகிய நான் உடையும்போது ஆத்மாவாகிய ஜோதி பிரகாசிக்கின்றது.

தேங்காய்க்கு மூன்று கண்கள். ஒன்றுதான் உண்மையான கண். மற்றவை இரண்டும் பொய்க் கண்கள். உண்மையான கண் மூலம்தான் தேங்காய் முளைவிடுகிறது. இதே போல எமக்கும் முகத்திலே உள்ள கண்கள் ஊனக்கண்கள். இவற்றால் ஞானத்தைக் காண முடியாது. ஞானக் கண்ணால் தான் ஞானத்தை அறிய முடியும். எமது ஞானக்கண் விரிவடையும் அளவுக்கு ஞான உதயம் உண்டாகிறது. தேங்காய் முளை விடுவதற்கு தேங்காயின் உண்மைக் கண் பயன்படுவது போல மனிதனுக்கும் ஞானம் உதிப்பதற்கு ஞானக்கண் பயன்படுகிறது.

# நிழலில் மயக்கம்

ஒளிக்கு எதிரே கைகளில் சில முத்திரைகளைப் பிடித்தால் அவற்றின் நிழல் நூதனமான உருவங்களை உண்டுபண்ணுவதைப் பார்க்கிறோம். கைவிரல்களில் உண்டான உருவம் ஒன்று அதன் நிழலில் உண்டான உருவம் வேறொன்று. இந்த நிழலில் மனிதன் மயங்கிவிடுகின்றான். இந்த நிழல் கானல் போன்றதொரு பொய்த்தோற்றம். இன்றைய மனிதன் இந்த நிழல்தான் சாசுவதமானது என்று நினைந்து அதன்பின்னே ஓடுகின்றான்.



# நிழலாட்டம்

நிழலாட்டம் என்று ஒரு கூத்து இருப்பதைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். அதுதான் பாவைக்கூத்து. மேடையிலே வெள்ளைத்திரை ஒன்றைக்கட்டி உள்ளே வெளிச்சம் ஒன்றை திரையிலே விழுமாறு வைத்து வெளிச்சத்திற்கும் திரைக்குமிடையிலே சில பொம்மைகளை நூலிலே கட்டித் தொங்கவிட்டு மேலே இருந்து ஒருவன் நூல்களை அசைத்தல்மூலம் பொம்மைகளை ஆட்டுகிறான். பாவைகளிலே கோர்த்து இருக்கிற அந்த நூலின் அசைவுக்கேற்ப பாவைகளின் நிழல் திரையிலே விழுகிறது.

இந்த நிழலாட்டத்திற்கேற்ற பாடல்களைப் பாடி புராணப் பிரசங்கங்களும் செய்வார்கள். புராணக் கதைகளை மிக இலகுவில் விளங்க வைத்து விடுவார்கள். பாவையின் ஆட்டமும் அதன் நிழலாட்டமும் ஆட்டுவோனில் தான் தங்கி உள்ளது. ஆட்டுவோனும் கயிறும் இல்லாவிட்டால் பாவைக்கூத்தே நடைபெறாது. இத்தத்துவத்தைப் பட்டினத்துச் சுவாமிகள் நன்கு விளக்குகின்றார்.

''நன்னாரிற் பூட்டிய சூத்திரப் பாவை நன்னார் தப்பினாற்
றன்னாலுமாடிச் சலித்திடுமோ வந்தத்தன்மையைப் போல்
உன்னாலியானும் திரிவதல்லால் மற்றுனைப் பிரிந்தால்
என்னாலிங் காவதுண்டோ இறைவா கச்சியேகம்பனே''

நல்ல நாரிலே தொடுக்கப்பெற்ற சூத்திரப் பாவை ஆட்டுவோன் இல்லாது ஆடாது. தானாக ஆடிச்சலிக்க முடியாது. அது போல சூத்திரதாரியாகிய இறைவன் இல்லாது உலகில் எதுவும் நிகழாது. அவனன்றி ஓரணுவும் அசையாது. அவன்

ஆட்டுவிக்க நாம் ஆடுகின்றோம். இறைவன் ஆட்டுவிக்க நாம் ஓடி ஆடித் திரிவதே அல்லாமல் ஆட்டுவிக்கும் அவனைப் பிரிந்து ஒரு கணப்போதேனும் வாழ முடியாது. ஆட்டுவோனும் நாலும் இல்லாது எவ்வாறு பாவைக்கூத்து நிகழாதோ, சூத்திரதாரியாகிய இறைவனும் திரு அருளுமின்றி உலகில் எச்செயலும் நிகழாது.

ஆட்டுவோன் எண்ணப்படி பாவை ஆடுகிறது. இறைவன் திருவுளப்படி நாம் இயங்குகிறோம். ஆட்டுவோன் இல்லாவிட்டாலும் சூத்திரநார் அற்றுப் போனாலும் பாவை இயங்குதலொழிந்து கிடக்கும். அதுபோல் இறைவன் இயக்க நாம் இயங்குதலன்றி எம்மால் என்னதான் செய்யமுடியும்? இதனை நாவுக்கரசுப்பெருமான் நல்ல அழகாக எடுத்துரைக்கின்றார்.

''ஆட்டுவித்தாலாரொருவர் ஆடாதாரே
அடங்குவித்தாலாரொருவர் அடங்காதாரே
ஓட்டுவித்தாலாரொருவர் ஓடாதாரே
உருகுவித்தாலாரொருவர் உருகாதாரே
பாட்டுவித்தாலாரொருவர் பாடாதாரே
பணிவித்தாலாரொருவர் பணியாதாரே
காட்டுவித்தாலாரொருவர் காணாதாரே
காண்பாரார் கண்ணுதலாய் காட்டாதாரே''

அப்பரின் இத்திருத்தாண்டகம் இறைவனது தன்வயமுடைமையை உணர்த்துமுகத்தால் உயிர்களிடத்து நிகழும் அவனது கைமாறற்ற உதவியைத் தெளிவுபடுத்துவது.

'யான்' 'எனது' என்னும் செருக்குக் காரணமாக பல்வேறு உடம்பாகிய பாவையுள்ளே எம்மைச் செலுத்துகின்றான். வினையாகிய கயிற்றினால் உலகமாகிய அரங்கினிடத்து ஆட்டுகிறான் இறைவன்.



மேல் உலகத்தில் ஆடுபவர்கள் தேவர்கள் எனப் பெயர் பெறுவர். கீழ் உலகத்தில் நடிப்பவர்கள் நரகர் எனப் பெயர் பெறுவர். பூவுலகத்தில் நடிப்பவர்கள் மனிதர் எனப் பெயர் பெறுவர். வினையை ஈட்டியும் நுகர்ந்தும் சுழலச் செய்தலாகிய கூத்தினை இயற்றுவிக்கிறான் இறைவன்.

இதனை மணிவாசகப் பெருமான்,

''கோனாகி யான் எனதென்று அவரவரைக்
கூத்தாட்டுவானாகி நின்றாயை
என் சொல்லி வாழ்த்துவனே''

என்று கூறுகின்றார். ஆட்டுவித்தல் என்பது உலகத்தைப் படைத்தலும் காத்தலும் ஆகிய தொழில்களால் ஆவதாகும். அடக்குவித்தல் என்பது இறைவன் ஆட்டுவித்தலால் ஆடிவரும் உயிர்கட்கு இளைப்புத் தோன்றாதவாறு ஆடலை இடையிலே சிறிது காலம் நிறுத்தி யாதும் செய்யாதவாறு அமைந்திருக்கச் செய்தலாகும். இதுதான் ஊழிக்காலம் எனப்படும்.

ஓட்டுவித்தலாவது பின் நின்று ஆட்டுவிக்கின்ற இறைவனை உள்நோக்கி உணராவண்ணம், உயிர்களைப் பிறபொருள் நோக்கி புறத்தே ஓடுமாறு ஓட்டுதல். இது மறைத்தல் என்னுந் தொழிலினால் நிகழ்வது. புறமே ஓடி ஓடிச்சென்று உயிர் ஒரு பயனும் காணாது இளைத்து வருகின்றது. இறைவன் அதனை உள்நோக்கித் தன்னை உணருமாறு செய்கின்றான். இறைவன் தன்னையும் தன் உதவியினையும் நினைந்து நினைந்து அன்பு கூர்ந்து மனம் உருகச் செய்கின்றான்.

நிழலைத் துரத்திச் சென்ற மனிதன் இளைத்துக் களைத்தபின் உண்மைப் பொருளை உணருகிறான்.

இறைவன் தன் பெருங்கருணைத்திறத்தினால் தன்னையும் தன்செயலையும் உணர்த்துகின்றான். அதனை நினைந்து உருகும்நிலை உயர்ந்த நிலையாகும்.

> ''நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து
> நெகிழ்ந்து நெகிழ்ந்து அன்பே நிறைந்து
> நிறைந்து ஊற்றெழுங் கண்ணீர் அதனால்
> உடம்பு நனைந்து நனைந்து அருளமுதே
> நன்னிதியே ஞான நடத்தரசே என்று
> வனைந்து வனைந்து ஏத்தும்''

நிலைமை ஏற்பட வேண்டும். அப்போதுதான் மரணமிலாப் பெருவாழ்வு கிட்டும்.

இவ்வாறாய உருக்கத்தின் வழி தோன்றும் வாழ்த்துக்களையும் புகழ்ச்சிகளையும் வாயார எடுத்துப் பாடுமாறு செய்தலே பாட்டுவித்தல் எனப்படும். இப்பாட்டுகள் தாமே பாடுவனவாகவும் அமையலாம்.

> ''ஆடும் பரிவேல் அணிசேவலெனப்
> பாடும் பணியே பணியா அருள்வாய்''
>
> —கந்தர் அனுபூதி

> ''பாடவேண்டும் நான் போற்றி'' —மணிவாசகர்

பணிவித்தலாவது அன்புமிக்கெழுந்து பெருக தன்முனைப்பு அடியோடு நீங்குதலால் தன்முன்னே நிற்றல் இன்றி நிலஞ்சேரவீழ்ந்து பணியச் செய்தல். அடியற்ற மரம் போல வீழ்ந்து வணங்குதல் என்பது தன்முனைப்பற்ற செயலையே காட்டுவது. என்கடன் பணி செய்து கிடப்பது. உருகுவித்தல் மனதின் செயல்; பாட்டுவித்தல் மொழியின் செயல்; பணிவித்தல் உடம்பின் செயல்; மனம், மொழி, மெய் மூன்றும் இறைவன் வழிப்பட்டு விட்டால்



மனம் இறைவனைத் தவிர வேறு எதையும் தியானிக்காது. மொழி இறைவன் புகழைத் தவிர வேறு எதையும் பேசாது; உடம்பு இறைவன் திருக்கோயிலைத் தவிர வேறு எதையும் வணங்காது. இவை அருளல் என்னுந் தொழிலால் நிகழ்வன.

மறைத்தலும் அருளலும் ஆகிய இத்தொழில்களைக் குறித்தே ''போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பின்'' என்பார் மணிவாசகர்.

இறைவன் தன்னைக் காட்டுவியாமையாலே ஜீவர்கள் அவனைக் காணாதிருக்கின்றன. அவன் அருளாலே தான் அவன் தாள் வணங்க வேண்டும். இறைவன் தனது பெருங்கருணைத் திறத்தால் காட்டுவித்தால் மாத்திரமே உயிர்கள் இறைவனைக் காண முடியும். அவனைப் பார்க்கும் கண்ணையும் அவனே தான் கொடுக்க வேண்டும். முத்திக்காலத்திலும் இறைவன் கருணை வைத்தால் தான் முத்தி நிலையை அடைய முடியும் அநுபவிக்க முடியும்.

## சினிமா

இந்த நிழல் ஆட்டத்திலிருந்தே இன்றைய சினிமா உலகம் வளர்ந்தது. சினிமா என்றால் மக்கள் மத்தியிலே ஒரு கவர்ச்சி. தீராத மோகம். திரையிலே நிழல் ஆடுகின்றது. அதனை மக்கள் இமையாத தேவர்கள் போல தன் இமை கொட்டாதே பார்க்கின்றார்கள். பார்த்து முடிவிலே அவர்கள் உள்ளத் திரையிலே பெருஞ்சுமை. படம் ஓடிய திரை வெறிச் சென்று வெள்ளையாக இருக்கின்றது. படம் ஓடிய

திரை, படமுடிவிலே நடந்ததெல்லாம் பொய்த்தோற்றம் என்பதைச் சொல்லாமல் சொல்லி விளக்கிக் கொண்டிருக்கின்றது.

அந்தத்திரை இறைவனேதான். இறைவன் எங்கும் உள்ளான். எங்குமுள்ள அந்தத்திரை மீது உலகிலுள்ள நிழலாட்டம் எல்லாம் நடைபெறுகின்றன. தியேட்டரிலுள்ள திரைக்கும் ஓடிய படத்திற்கும் எவ்வாறு சம்பந்தம் இல்லையோ அவ்வாறே ஆண்டவனாகிய திரையிலே நடைபெறும் இந்த நிழலாட்டங்களுக்கும் சம்பந்தமே இல்லை. திரையில் படம் தோய்ந்துகொள்வதில்லை. இந்த நிழலாட்டங்களுக்கெல்லாம் திரை ஆதாரமாக அமைந்துள்ளது. திரை திரையாகவே இருக்கின்றது. நிழலாட்டம் நிகழும்வரை திரையை யாரும் சிந்திப்பதில்லை. திரை படம் ஓட்டத்திற்கு முன்பும் உள்ளது; பின்பும் உள்ளது. மனிதன் ஆதாரமாகிய இறைவனுக்குப் பின்னால் செல்லாது நிழலாட்டங்களுக்குப்பின்னே சென்று கொண்டிருக்கின்றான். ஆட்டம் ஓய்ந்ததும்தான் ஆதாரம் என்ன என்பதை விளங்கிக்கொள்ள முடியும்.

மண், பெண், பொன் போன்ற ஆசைகள் பட்டம், பதவி, புகழ் போன்ற ஆசைகள் எல்லாமே நிழலாட்டங்கள்தான். அவற்றைப் பிடிக்க மனிதன் படுவேகத்தில் சென்றுகொண்டிருக்கிறான். ஈற்றில் நிழலைத் துரத்திய மனிதனுடைய கதையாகவே முடிகின்றது.

நிழலைத் துரத்திய மனிதன் சூரியனை நோக்கித் திரும்பிய உடனே நிழல் பின்னாலேயே தொடருகின்றது. மனிதனும் இறைவனை நோக்கி உள்ளத்தைத் திருப்பிய உடனே. செல்வம், பட்டம், பதவி எல்லாம் அவனைத் துரத்திக்கொண்டு வருகின்றன.



இன்று மக்கள் கூட்டம் நிழலைத் துரத்திய மனிதனின் நிலையையே அடைந்துள்ளனர். அவர்கள் இவற்றுக்காகச் செலவிடும் நேரத்தில் நூறில் ஒரு பங்கு தானும் இறைவனைப் பக்தி செய்வதில் கழிப்பார்களே ஆனால் அவர்கள் விரும்பியன எல்லாம் காலடியில் வந்து குவியும்.

''ஆசைப்படப்பட ஆய்வருந்துன்பம்
ஆசைவிடவிட ஆனந்தமாமே''

ஒரு பொருளைத் தேடிப்போனால் கிடையாது. சும்மா இருந்தால் தேடுவாரற்றுக் கிடக்கும் என்று மக்கள் சாதாரண வாழ்க்கையில் சொல்வதைக் கேட்கின்றோம். ஆசையோடு தேடிச்செல்ல அது தூரவே சென்றுகொண்டிருக்கின்றது. தேவையில்லை என்று ஒதுக்கிய உடனே காலடியில் கிடக்கின்றது. இந்த உண்மையை மனிதன் அறியும் அளவுக்கு மேலோன் ஆகின்றான்.

முன்பெல்லாம் ஊரில் உயர்ந்த கட்டிடம் கோயில்; இப்போ தியேட்டர். கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்றார்கள்; இப்போ தியேட்டர் இல்லா ஊரில் மக்கள் இருக்க விரும்புவதில்லை. முன்பெல்லாம் உயர்ந்த பொழுதுபோக்கு கோயிலை மத்தியாக வைத்து நிகழ்ந்தது. இப்போ மனித வாழ்க்கை தியேட்டரைச் சுற்றி ஓடுகின்றது. கோயிலில் பூஜை காண்பதற்கு அரை மணித்தியாலம் பொறுத்திருக்க மாட்டாத மனிதன் தியேட்டர் கியூவிலே ஆறு மணித்தியாலம் கால்கடுக்க நிற்கின்றான். முன்பெல்லாம் கோயிலுக்குச் சென்று கண்ணுக்கினியன காதுக்கினியன பெற்று தனது வாழ்க்கையை உயர்த்திக் கொண்ட மனிதன் தியேட்டருக்குச் சென்று கீழ்த்தரமான எண்ணங்களை வளர்த்து வாழ்க்கையைப் பாழ் அடித்துக் கொள்ளுகின்றான்.

"வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்" என்றும் பாடியவர் இந்த நிழலாட்டத்தைக் கண்டே கூறினர்,

''இறைகளோடு இசைந்த இன்பம்
இன்பத்தோடு இசைந்த வாழ்வு''

என்று கூறியவர் கடவுளனுபவத்தில் அநுபூதி பெற்று கூறினர்.

இந்த இரு கருத்துக்களையும் கூறியவர் ஒருவரே தான். அவர்தான் சுந்தரமூர்த்தி சுவாமிகள். அவர் பூவுலகில் வாழ்ந்தது பதினெட்டு ஆண்டுகள் மாத்திரமே. இதற்குள் மூன்று கல்யாணம். ஒன்று இறைவனால் நிறுத்தப்பட்டு விட்டது. இரு மனைவியர்களோடு வாழ்ந்தார். எல்லாவற்றுக்கும் மேலாக இறைவனுரைத் தோழமை கொண்டார். தோழமை நெறிக்கு உதாரணமான புருஷர். அவருக்கு அவரே நிகர் என்ற வகையில் தோழமை நெறியை விளக்கியவர், வாழ்ந்து காட்டியவர். வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சமும் இறைவனேடு சம்பந்தப் படுத்தியே வாழ்ந்தவர். இறைவன் இல்லாது தானும் இல்லை; தனது வாழ்க்கையும் இல்லை என்ற அளவுக்கு நம்பிக்கையைப் பேணியவர்.



# பார்வை நிலைப்பு

கி.மு. 65இல் லூக்ரீஷெஸ் என்ற ரோமானியக் கவிஞர் கண்ணுக்குள்ள ஒருவகைப் பண்பைக் கண்டு பிடித்தார். நாம் ஒரு பொருளைப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே அது திடீரென மறைந்து விடுவதாக வைத்துக் கொள்வோம். அப்பொருள் மறைந்த உடனே, அது நமது கண்ணிலே தோற்றுவித்த புலனுணர்ச்சியும் மறைந்து விடுவதில்லை. அவ்வுணர்ச்சி மறைந்து போவதற்குச் சிறிது தாமதம் ஏற்படுகிறது. இத்தாமத காலம் ஒரு செக்கனிலே பதினறிலொரு பாகமாகும். எனவே ஒரு பொருள் நமது காட்சியிலிருந்து மறைந்து பதினறிலொரு செக்கனுக்குள்ளே மறுபடியும் தோன்றக் கூடுமானல் அப்பொருள் மறைந்து பின்னர் தோன்றியது நமது கண்ணுக்குப் புலனாகாது போய்விடும். கண்ணுக்குள்ள இப்பண்புக்குப் பார்வை நிலைப்பு என அவர் பெயரிட்டார். "லூக்ரீஷெஸ்" இப்பண்பைக் கண்டுபிடித்து சுமார் 200 ஆண்டுகள் கழிந்த பின்னர் டொலமி என்ற வானவியலறிஞர் இப்பண்பு இருப்பதைப் பரிசோதனை மூலம் நிரூபித்தார். ஓர் அட்டையின் மீது ஒரு புள்ளியை வைத்து வேகமாகச் சுற்றினல் அது ஒரு வட்டம் போல் தோன்றுவது கண்ணுக்குள்ள இப்பண்பினுல்தான்.

டாக்டர் பிட்டன் என்ற ஆங்கிலேயர் 1825ல் தாமட்ரோப்பு என்ற ஒரு விளையாட்டுக் கருவியை அமைத்தார். வட்டமான மெல்லிய அட்டையின் ஒருபுறம் கிளிக்கூண்டும் மறுபுறம் கிளியும் வரைந்து அதனூடே மெல்லிய நூலைச் செலுத்தி அந்த அட்டையை வேகமாகச் சுற்றினல் கிளி கூண்டினுள் இருப்பது போலத் தோன்றும்.

இந்தப் பார்வை நிலைப்பு படிப்படியாக வளர்ந்தே இன்றைய சினிமா உருவானது. அது எவ்வளவு வளர்ந்தாலும் நிழல் என்ற உண்மையை மறந்து விடக்கூடாது. தத்ரூபமானது என்று நினைத்து விடக்கூடாது. இருளான காட்சிகள் மனித மனத்தில் இருளையே தோற்றுவிப்பது போல நிழலாட்டங்களும் மனித மனத்தில் நிழலுக்குரிய குணங்களையே உண்டாக்கிவிடுகின்றன.

தியானத்திற்கு முதற்படி இந்தப் பார்வை நிலைப்பு என்ற பண்பு என்றே கூறலாம். ஒரு அழகான பெண்ணை ஒரு வாலிபன் பார்க்கிறான். அவளுடைய அழகில் மனதைப் பறிகொடுத்து விடுகிறான். அவள் கண்ணுக்கு மறைந்த பின்பும் அவன் அத்திசையையே சிறிது நேரத்திற்குப் பார்த்துக் கொண்டு நிற்கிறான். பார்வை நிலைப்பின் பண்பினால் அவளுடைய தோற்றம் அவனுடைய பார்வையை விட்டு அகலவில்லை. சில நாட்களுக்கு அந்த உருவம் அவனுடைய மனத்தில் நிலைத்து நிற்குமானால் அவளைப் போன்று தெரியும் உருவங்களை எல்லாம் அவளாகவே கருதிவிடுகின்றான்.

## வாலிபனின் காதல்

சொந்த அனுபவத்தில் ஒரு செய்தி. ஒரு வாலிபர் ஒரு வெள்ளைக்காரப் பருவப்பெண்ணைக் காதலித்தார். வாலிபன்தான் காதலித்தானே தவிர வாலிபனுடைய காதலைப் பெண் அறியாள். இவன் தனது காதலை அப்பெண்ணுக்கு அறிவித்துக்கொண்டதும் கிடையாது. அந்தப் பெண் மிகச்சாதாரணமாக மற்றவர்களுடன் எப்படிப் பழகுகின்றாளோ அப்படித்தான் அவள் இவ்வாலிபனுடனும் பழகினாள்.



தன்னுடைய உள்ளத்திலும் உடலிலும் ஏற்பட்டுள்ள உணர்வு அப்பெண்ணுக்கும் ஏற்பட்டிருக்கலாம் என்றும் சிலவேளை வாலிபன் நினைத்திருக்கலாம். தினமும் அப்பெண்ணைச் சந்திக்கத் தவறுவதில்லை. இவர் தன்னைக் காத்திருந்துதான் சந்திக்கிறார் என்பதைக்கூட பெண் அறியாள். சில நாட்களில் பெண் இங்கிலாந்து தேசம் போய்விட்டாள். பாவம்! இச் செய்தியை வாலிபன் அறியான். அப்பெண்ணைத் தேடி முன்பு சந்தித்த இடத்திற்குப் பல நாட்கள் அலைந்தான். அயலூர்களிலும் தேடினான். அப்பெண்ணைக் காணாமல் தனக்கு வாழ்க்கை இல்லை என்ற அளவுக்கு அவனுடைய மனோநிலை மாறிவிட்டது. உலகம் என்பது ஒன்று இருக்கிறதே! அது தன்னைக் கவனிக்கிறது என்பதையும் வாலிபன் உணரவில்லை. காதல் முற்றிப் பைத்தியமாகிவிட்டது. வெள்ளை நிறமுடைய பெண்கள் யாரைக் கண்டாலும் ஓடிச்சென்று "மை டார்லிங்" என்று சொல்லத் தவறுவதில்லை. வேறு யாருக்கும் அவரால் வேறொரு தொந்தரவும் கிடையாது. இந்த வாலிபனிடம் உள்ள பார்வை நிலைப்பு என்ற பண்பே பைத்தியம் அளவிற்கு வளர்ச்சி அடைந்துள்ளது.

தியானம் பழகுகிறவர்கள் ஆரம்பத்தில் மூர்த்தி தியானத்தையே எடுத்துக்கொள்வார்கள். அவர்கள் தியானத்திற்கு எடுத்துக் கொள்ளும் தியானப் பொருள் கோயிலிலே மிக அழகாக அலங்கரிக்கப்பட்டுள்ளது. கோயிலுக்குச் சென்றவன் மூர்த்தியின் அலங்காரத்திலே தன்னை மறந்து நிற்கிறான். கண்களால் அழகை அள்ளி அள்ளிப் பருகுகின்றான். கண்களை மூடுகின்றான். கணப்பொழுது மூர்த்தி தோன்றி மறைகிறது. பலமுறை பார்த்துப் பார்த்து மூர்த்தியின் திருவுருவை உள்ளமாகிய திரையிலே எழுதுகின்றான். உள்ளத்திலே எழுதிய திருவுருவை வீட்டிலும் காட்டிலும் வழியிலும் தெருவிலும் நித்தி

ரையிலும் விழிப்பிலும் தியானப்பொருளாக எடுத்துக் கொள்ளுகின்றான். இதனை உள்ளத்திலே படம் பிடிப்பது மிக லேசான காரியம் அல்ல. உள்ளத்திலே தியானப் பொருளை ஒளிபெறச் செய்வதற்குச் சிலரால் இப்பிறப்பில் தானும் இயலாததாகலாம். வேறு சிலருக்குப் பல பிறப்புகள் எடுக்கலாம். நம் பிக்கையும் சாதனையில் இடைவிடா முயற்சியுமே வெற்றி அளிப்பது.

'உயிராவணமிருந்து உற்றுநோக்கி
உள்ளக்கிழியின் உருஎழுதி''

என்பது அப்பர் சுவாமிகளுடைய திருவாக்கு.

## பளிங்கு மண்டபம்

பஞ்சபாண்டவர்கள் பளிங்கு மண்டபம் ஒன்று கட்டினார்கள். மகாபாரதக் கதையின் முக்கிய திருப்பு முனைகளில் பளிங்கு மண்டப நிகழ்ச்சிகள் முதலிடம் வகிக்கிறது. பளிங்கு மண்டபத் திறப்பு விழாவிற்குத் துரியோதனனுதியருக்கும் அழைப்புச் சென்றது. துரியோதனன் பளிங்குமண்டபவாசலைக் கடந்து மண்டபத்தினுள்ளே கால் வைக்கும்போது உடை நனைந்து விடும் என்று உடையைத் தூக்கினான். கண்ணாடியில் விழுந்த நிழலின் தோற்றம் நீர் நிறைந்திருப்பது போல துரியோதனனுடைய மனத்திலே தோற்றத்தை உண்டாக்கியது.

தூண் உள்ள இடத்திலே ஒன்றும் இல்லாதது போலிருக்கும். கவலையீனமாகச்செல்பவர் தூணிலே மோதிக் கொள்ளுவார். ஒன்றுமில்லாத இடம் ஏதோ ஒரு பொருள் இருப்பது போல ஒரு நிழலாட்டம்.



அதற்கு விலகிச் செல்பவர் உண்மையான தூணிலே சென்று மோதிக்கொள்ளுவார். இத்னைத் திருவருட் பயன் ஆசிரியர் ஒளிகவருந்தம்பம் எனக் குறிப்பிடுவார்.

''தனக்கு நிழலின்று ஒளிகவருந்தம்ப
மெனக்கவர நில்லாது இருள்''

சூரியன் உச்சியில் நிற்கும் போது படிகத்தூணினுடைய நிறம் தோன்றப் பெறுவதில்லை. சூரிய கிரணத்தால் அது கவரப்பட்டு விடுகின்றது. அது போல ஆன்மா திருவருளாற் கவரப்படும் போது தன்னறிவு தோன்றப் பெறுமல் நிற்கும் அந்நிலையிலே மலம் இல்லாமல் போகும்.

படிகத் தூணிலே தூசு போன்ற அழுக்குகள் இருக்குமானுல் சூரிய ஒளியினுல் படிகத்தூணின் நிறத்தைக் கவரமுடிவதில்லை. ஆன்மாவிடத்திலே அழுக்கு மூடியிருக்குமானுல் திருவருளால் அதனைக் கவர முடிவதில்லை. சிரட்டை மூடி இருக்கும்வரை பருப்பைக் காணமுடியாது. சிரட்டையை உடைத்தால்தான் பருப்புத் தோன்ற முடியும். ஆணவமாகிய சிரட்டையை உடைத்து எறிய வேண்டும். அப்போதுதான் பருப்பும் இளநீரும் மனிதனுக்குப் பயன்படுகின்றது.

மனிதனிடத்திலே ஆணவம் இருக்கும்வரை அவனால் யாருக்கும் ஒரு பயனும் கிடையாது. ஆணவம் அற்ற இடத்திலே சுயநலம் அழிகின்றது. பரநலம் தோன்றுகின்றது. பரநலம் தோன்றிய இடத்திலே தன்னையே முழுவதாக சேவைக்காக அர்ப்பணித்துவிடுகின்ருன்.

# ஆயிரம் தேங்காய் உடைத்தவரின் ஆணவம்

ஒரு தேர்த்திருவிழா. அர்ச்சனை செய்விப்பவர்கள் ஒரு தேங்காய் மாத்திரம் உடைத்தார்கள். சிதறு தேங்காய் உடைப்பவர்கள் நூறு, இருநூறு என்று உடைப்பார்கள். தேங்காய் உடைப்பதின் தத்துவம் தான் என்ன? தேங்காய் பருப்பை மூடி இருப்பது வயிரமான சிரட்டை. சிரட்டையை உடைத்தால் தான் பருப்பாகிய வெண்மை தோற்றும். ஆத்மாவை அகங்காரம் மூடியிருக்கின்றது. அகங்காரம் உடைகிறபோதுதான் ஆத்மஜோதியைக் காணமுடியும். தேங்காய் உடைப்பதன் தத்துவம் ஆத்மாவை மூடியுள்ள ஆணவம் சுக்குநூறாகிப் போகவேண்டும் என்பதுதான். ஒவ்வொரு தேங்காய் உடைக்கும் போதும் எமது ஆணவத்தின் ஒருபகுதி குறைந்து கொண்டே வரவேண்டும். இந்தத் தத்துவத்தை விளங்கிக் கொண்டால்தான் தேங்காய் உடைப்பதனால் பலன் உண்டு.

சிதறு தேங்காய் அடிக்கும் போது சிதறுகின்ற துண்டுத் தேங்காய்கள் ஏழைகள் சிறுவர்களுக்கு உணவாகின்றது. தேங்காய் சிதறிய பின் அது தனக்குச் சொந்தமாக இருக்க வேண்டுமென்று விரும்பக் கூடாது. அவனுடைய கைப்பொருளும் பலருக்குச் சிதறிப் பயன்பட வேண்டும் என்பதை அது சொல்லாமற் சொல்லிக்காட்டுகின்றது. தேங்காய்த்துண்டுகளை இறைவனுடைய பிரசாதமாகக் கருதி எல்லோரும் உண்ணுவார்கள். சிரட்டையை யாரும் தீண்டுவதில்லை. சிரட்டையையும் அந்த இடத்திலே விடக்கூடாது. விட்டால் அது எத்தனையோபேருடைய வெறுங்கால்களைப் பதம் பார்த்துவிடும். பெரியவர்கள் அச்சிரட்டைத் துண்டுகளை அப்புறப் படுத்துவதிலேதான் கண்ணும் கருத்துமாக இருப்பர்.



இதே போன்றுதான் மகான்களும் ஒருவனுடைய ஆணவத்தை இல்லாமற் செய்வதிலேயே மிகக் கண்ணுங் கருத்துமாக இருப்பர். ஒரு சிரட்டைக் கூர் அகற்றப்படாவிட்டால் அவ்வழியால் செல்லும் அத்தனைபேரையும் மருத்துவமனைக்குப் போகச் செய்துவிடும். அதுபோல ஒருவனுடைய அகங்காரத்தினாலே ஒரு தேசமே பாழடைந்துவிடக் கூடும். ஒருவனுடைய அகங்காரம் அவனையே நாசம் செய்துவிடுகின்றது. இன்னொருவனுடைய அகங்காரம் அவன் குடும்பத்தை நாசமாக்குகின்றது. வேறொருவனுடைய அகங்காரம் அவனைச் சேர்ந்தவர்களையே நாசமாக்கிவிடுகின்றது. பிறிதொருவனுடைய அகங்காரம் தேசத்தையே நாசமாக்கிவிடுகின்றது. இன்றைய உலகில் சிலருடைய அகங்காரம் உலகத்தையே நாசமாக்குகிற அளவிற்கு வளர்ந்துள்ளதையும் பார்க்கிறோம்.

அகங்காரம் தன்னை எப்பொழுதும் யாருக்கும் காட்டிக்கொள்வதில்லை. அகங்காரம் என்ற ஒன்று தம்மிடம் இருப்பதைப் பலர் அறியார். இருள் தன்னைக்காட்டும். தன்னுள்ளே உள்ள பொருள்களைக் காட்டாது. ஆணவம் தன்னையும் காட்டாது; தன்னுள்ளே உள்ளதையும் காட்டாது. ஆகவே ஆணவம் இருளிலும் கொடியது என்று சொல்லுவார்கள்.

தேர்த்திருவிழாவிலே ஆயிரம் சிதறு தேங்காய் அடிப்பதாக ஒருவர் நேர்த்திக்கடன் செய்தார். ஆள் நல்ல ஆஜானுபாகுவான தோற்றம் உடையவர். அவர் குவித்து வைத்திருந்த தேங்காய்க் குவியல் அவரைப் போலவே உயர்ந்து நின்றது. நூறு, இருநூறு உடைத்தவர்களுடைய இடங்களைத் தாண்டி தேரும் ஆயிரந் தேங்காய் உடைய குவியலை நோக்கி நகர்ந்தது. தேங்காய்க் குவியலுக்கு பத்து அடி தூரத்திலே தேர் வரும்போதே தேங்காய்கள் சிதறத்

தொடங்கின. இதனால் தேரே அரை மணித்தியாலம் வரை தாமதிக்க நேர்ந்துவிட்டது. வேறு இடங்களில் உள்ளவர்களும் இருபத்தைந்து, ஐம்பது என்று தேங்காய்கள் கொண்டுவந்து அந்த இடத்திலேயே உடைத்தனர். இதனாலும் அவருக்கு ஒரு பெருமை.

ஒருவாறு தேங்காய் அடியும் ஒழிந்தது. தேங்காய் அடித்தவருக்கு சுவாமி கும்பிட நேரமில்லை. கைகளைத்தூக்கித் தலைமீது வைக்கவும் நேரமில்லை. ஆயிரந் தேங்காய் உடைத்த பெருமை உள்ளத்திலே தலைதூக்கி நின்றது.பக்கத்திலுள்ளவரைப் பார்த்து எப்படி என்று கேட்டார். "உங்களுக்கு நிகர் நீங்களேதான். உங்களைப் போல ஆயிரம் தேங்காய் உடைக்க இந்த ஊரிலே யார் இருக்கிறார்கள்" என்று சொன்னார் அயலே நின்றவர். இதற்கு மேலே அவரது நிலையைச் சொல்லவா வேண்டும். ஒரு பெரிய இராச்சியத்தை வெற்றி கொண்டவனைப்போலப் பெருமிதம் அடைந்தார். பத்து, இருபது தேங்காய்கள் உடைத்தவரைப்பற்றி ஏளனமாகவும் ஆயிரம் தேங்காய் உடைத்ததைப்பற்றி மிகப் பெருமையாகவும் பேசத் தொடங்கினார். அடுத்த இரதோற்சவத் திருவிழா வரும் வரைக்கும் அப்பேச்சு நீண்டு கொண்டே இருந்தது. ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி தான் தேங்காய் உடைத்த செய்தியை அவர் சொல்லாத நாட்களே கிடைக்காது.

இதனை அவர் வாயினாலே அடிக்கடி கேட்டுச் சிலர் சலிப்பும் அடைந்தார்கள். ஆயிரந் தேங்காய் உடைத்தவருடைய ஆணவத்திலே ஆயிரம் பங்கு குறையவேண்டியதற்குப் பதிலாக ஆயிரம் மடங்கு கூடியே காணப்பட்டது. இதுவும் நிழலின் மயக்கமேதான்.



நமக்குக் கண்கள் இருக்கின்றன அவை இருள், ஒளி, இரண்டுடனும் பழகுகின்றன.பகலில்ஒளியைக் கண்டு பழகுங்கள், இரவில் இருளுடனும் இயையும். அது நீங்கி ஒளியுடனும் பழகும் இயல்பு அதற்குண்டு. அவ்வாறே உயிர், ஞானமாகிய ஒளியுடனும் பழகும்; அறியாமையாகிய இருளுடனும் பழகும். இருளுடன் பழகும் காலத்தில் தான் பெற்றசெல்வம், தன் மனைவி, மக்கள், உறவினர், உற்றார், இனியர், நண்பினர் ஆகியோரையும் அறியமுடியாது திகைக்கின்றது. அஞ்ஞானமாகிய இருள் இவ்வாறே நமக்கு இன்பந்தரும் பொருள்களுடன் நம்மைப் பழக ஒட்டாது தடுக்கின்றது. ஞானத்தை அறியாத காலத்தில் இன்பத்தையே அறியாது வருந்துகின்றோம். கண்ணுக்கு இருளினால் பல கோடிதுன்பங்கள் உள்ளன. உயிருக்கும் அறியாமைத் தொடர்பால் அளவிறந்த துன்பமுண்டு.

## கருவில் உள்ள குழந்தை

சூரியனால் இருள் நீங்கும். அறையினுள் படுக்கையிருந்தாலும் தன் கிரணத்தை நீட்டி இருளை ஒளித்துத் தூக்கத்தையும் நீக்கி விழிக்கச் செய்வான். அங்ஙனமே கடவுட் சூரியன் அறிவுக்கதிரால் தாயின் கருப்பை ஆகியஅறையில் கிடந்தாலும் உயிர் என்ற கண்ணில் சேர்ந்து அறிவை உண்டாக்குகின்றான். கருப்பையில் கிடக்கும் குழவிக் கருவிற்கு ஒன்பது மாதம் வரை அறிவு விளக்கம் இல்லை. மலர்ந்த காலத்தில் மலரினின்றும் வெளியாகும் நறு நாற்றம், அது அரும்பாக இருக்கும்காலத்தில் அதனுள் அடங்கிக்கிடக்கின்றது. அவ்வாறே ஒன்பது மாதம்வரை அக்குழவிக்கருவில் அறிவு அடங்கிக்கிடக்கின்றது. பத்தாவது மாதத்தில் மலர்ந்த அலரில் தோன்றும்

மணம்போல கருவுக்கும் அறிவு தோன்றுகிறது. தன்னைச் சுற்றிலும் உள்ளபொருளில் அக்கரு கருத்தைச் செலுத்துகின்றது. நீர்ப்பை, மலப்பை அருகில் கருப்பையில் அடைந்துள்ளோம் நாம். துன்பம் மிக்க இடத்தில்அல்லவோ இருக்கின்றோம். இக்கருப்பவாழ்வு கொடிய வாழ்வு என்று அறிகின்றது.

"நறு நாற்றம் இன்றி நல்லிடமும் இன்றி இருக்கும் இவ்விடத்தில் வாழ்தலினும் வாழாதிருத்தலே நன்று. எவ்வாறேனும் இத்தகைய வாழ்வு வாராதிருக்குமாறு விலக்கவேண்டும். இனி எக்காலத்தும் இத்தகைய இடத்திற்கு வரலாகாது" என்ற முடிவிற்கு வருகின்றது.

தாய் கருவில் வாழுமுயிர் தாமெல்லாம் வேண்டுவது
தூய பிறவாமை ஒன்றே

நமது வேண்டுதல் இதற்கு மாறனது. பிறவாமை ஒன்றைத் தவிர மற்றெல்லாவற்றையும் வேண்டுகிறோம். நாவுக்கரசுப் பெருமான் கடலினின்றும் கரை ஏறிப் பாடல் நாதனைப் பாடிய பாட்டுக்களுள் கடைச் செய்யுளில் இக்கருத்தையே வலியுறுத்தி "அடியேன் இனிப்பிறவாமல் வந்தேன் றுகொள்வே" என்று அருளியுள்ளார்.

நாடோறும் நாம் கைக்கொண்டுள்ள வாழ்க்கையில் காலையில் எழுல், உண்ணல், உடுத்தல், பொருள்தேடல், இன்பம் எனச் சிலவற்றை எண்ணி நுகர்தல், உறங்கல் முதலிய உடல் முயற்சி நடக்கின்றதோ அன்றி கருப்பத்தில் தோன்றிய எண்ணம் மறைந்தது ஒழிந்தது.

கருவில் தோன்றிய நினைவு மறைந்தது ஏன்?



"கருவாய் கிடந்துன் கழலே நினையுங் கருத்துடையேன்" என்றார் அப்பர் சுவாமிகள். பெரிய மலைமேல் ஒருவன் நிற்கிறான். அக்காலத்தில் பெருங்காற்றொன்று அடிக்கின்றது. மலையிலேயே இருக்க வேண்டும் என்பது அவன் எண்ணமாயினும் அங்ஙனம் இருக்கச்செய்யாது அவனைத் தலைகீழாகத் தள்ளுகின்றது. காற்று வேகத்தால் தலைகீழாக அவன் வருகின்றான். அக்காலத்தில் மலைமேல் கவலையின்றி அவனிருந்தபோது அவனுக்குண்டாகிய எண்ணம் நிலைத்திருக்குமா? எவ்வாற்றானும் இல்லாது ஒழியும். அவ்வாறே பிரசூதவாயு வேகமாக நம்மைக் கருவிலிருந்து தள்ளும்போது நம் எண்ணம் கரைந்தது. அம்மட்டோ? ஆலையிலகப்பட்ட கரும்புபோல் துன்புற்றான். அதனால் மிகுந்திருந்த அறிவும் மறைந்தொழிந்தது. அவ்வளவிலும் நிற்கவில்லை. உலகத்தில் பிறந்தவுடன் உலகமாயை என்ற சடம் மூடுகின்றது. மூடவந்த சடத்தைக் கோபித்து ஒழித்தமையாலன்றோ நம்மாழ்வார் சடகோபர் எனப்பட்டார். நாம் அப்படிச் செய்தோமா? இல்லையே. சிறிது எஞ்சியிருந்த கரு அறிவும் அறவே சடத்தாலழிய உணர்வற்றுப் பிறக்கின்றான். பூமியில் படுதலாலே தான் சடம் மூடுகின்றது. இல்லையேல் இல்லை. பரம்பரையாக வழங்கி வரும் உபகதை ஒன்றிலே பிறந்த குழந்தையைப் பொற்றட்டில் தாங்கினர் என்றொரு செய்தி வருகின்றது. அக்குழந்தை நாரதமுனிவருடன் பேசியதாகவும் செய்தி உள்ளது.

இவ்வாறு நம்மை மூடிக் கிடக்கும் சடமாயை என்னும் அஞ்ஞானம் அகல வேண்டும். இதனை ஒழிப்பது கடவுள் ஞானமே. அந்த ஞானம் வரின் நம் கண்கள் விழிப்படையும். அக்காலத்தில் உலகம், நாம், கடவுள் என்னும் முப்பொருள்களையும் காணலாம்.

நிழலின் பின்னாகச் செல்லும் நமது வாழ்க்கையை உற்று நோக்கினார் புலவர் ஒருவர். அவர்தான் நாமக்கல் இராமலிங்கம்பிள்ளை அவர்கள். தமது நெஞ்சத்தோடு சொல்லி இரங்குவது போல ஒரு பாடலை எமக்கெல்லாம் பொருத்தமாகப் பாடி உள்ளார்.

**பல்லவி**

ஒருநாளைக் கொருதரம் ஒருநொடிப் பொழுதேனும்
உன்னைப் படைத்தவனை எண்ணிச் சுகித்ததுண்டோ-மனமே

**அனுபல்லவி**

திருநாளும் தேரும் என்று தேடி அலைந்ததல்ல
சிந்தனை அலையாமல் தியானத்தில் நிறுத்தியே (ஒரு)

**சரணம்**

விடியுமுன் விழித்தனை வெளுக்குமுன் வீட்டை விட்டாய்
வெவ்வேறு இடத்துக்கு வெளவால் போல் ஓட்டமிட்டாய்
உடலும் மனமும் சோர்ந்து ஓய்ந்திட வீடுவந்தும்
உண்ணும் பொழுதுங்கூட எண்ணம் நினைப்பதில்லை (ஒரு)

அரைக்காசுக்கானாலும் ஒருநாள் முழுதுங்காப்பாய்
ஆயிரம் பேரையேனும் அலுப்பின்றிப் போய்ப்பார்ப்பாய்
உரைப்பார் உரைகட்கெல்லாம் உயர்ந்திடும் செல்வனை
உன்னுள் இருப்பவனை எண்ணிட நேரமில்லை (ஒரு)

சிலநாளைக்கதிகாரம் செய்யும் ஒருவர்க்கஞ்சி
செய்யச் சொல்வதையெல்லாம் செய்வாய் நீ பல்லைக்கெஞ்சி
பலநாளும் ஜன்மமெல்லாம் பாலிக்கும் அதிகாரி
பரமனை நினைக்கவும் ஒருகணம் உனக்கில்லை (ஒரு)

நாளும்கிழமை என்று நல்லவர் உரைத்தாலும்
நாளைக்கு ஆகட்டும் வேலை அதிகமென்பாய்
பாழும் பணத்தைத்தேடிப் படுபாடு கணக்கில்லை
பகவானை எண்ணமட்டும் அவகாசம் உனக்கில்லை (ஒரு)



இருளிலே படிகத்தூண் இருளாகி இருப்பது போல, ஆணவத்தோடுள்ள நிலையில், ஆன்மா ஆணவ மயமாக நிற்கின்றது. சூரியன் உதயமாகப் படிகத்தூண் இருள்நீங்கித் தன்னிறங்காட்டி நிற்பது போல, மலபரிபாகமானபோது ஆன்மா தன்னறிவோடு நிற்கும். சூரியன் மேலே வரவரத் தூணைச் சூரிய ஒளி அதிகமாகப் பற்றுவது போல, ஆன்மாவிலே திருவருள் பதியப் பதிய ஆன்மாவைச் சிவபோதம் பற்றும். சூரியன் உச்சியில் வரும்போது தூணின் ஒளி சூரியப்பிரகாசத்தில் மறைய அது முழுவதும் சூரிய கிரணமயமாக நிற்பது போல, சிவபோதம் ஆன்மாவை முற்றாக கவர்ந்து தன்னுள்ளே அடங்கும் போது ஆன்மா சிவமயமாகின்றது.

ஒரு பொருளைப் பார்க்கிறவன் விளக்கை முன்னாகப் பிடித்தால் பொருள் விளக்கமாகத் தெரியும். வழியில் பள்ளந்திட்டியும் தெரியும். பின்னால் பிடிப்பானாயின் பொருளையும் அறியாது வழியையும் அறியாது கஷ்டம் உறுவான். அவனுடைய நிழலே அவனுக்கு யமனாகமுடியும். தனது நிழலினால்தானே மரணம் அடைந்த சரித்திரம் போல தனது பொருட்களினாலேயே தான் கஷ்டம் உறுகின்றவனைப் பார்க்கின்றோம். விளக்கின் பயனையும் பெற்றுக் கொள்ளத் தவறிவிடுகின்றான். இதே போல இறைவனை முன்வையாதவர்களும் இறைவனால் அடையும் இன்பத்தை இழந்து விடுகின்றார்கள்.

மகாத்மா காந்தி அடிகள் ராம நாமமாகிய விளக்கை முன்வைத்தே அரசியலைப்பார்த்தார். அதனால் அவருக்கு அரசியலில் ஒரு ஒளி தோன்றியது. அந்த அநுபவத்திலேதான் ராமராச்சியத்தைப் பற்றிச் சிந்திக்க முடிந்தது.

காசிபமுனிவர் சூரபத்மா முதலிய தமது புதல்வர்களுக்கு பதி, பசு, பாசம் என்று பாடத்தை முதலில் ஆரம்பித்தார். மாயை அந்த உபதேசம் தனது பிள்ளைகளுக்கு உகந்ததல்ல என்று கூறி தானே அவர்களுக்கு உபதேசத்தை ஆரம்பித்தாள். உலகம் சாசுவதமானது. உலகப் பொருட்கள் அநுபவிக்கப் படவேண்டிய பொருட்களாகும். பொன்னும் பொருளும் மண்ணும் பெண்ணும் ஆகியவையே முதலிடம் பெறவேண்டியவை என்று உபதேசம் செய்து பிள்ளைகளைத் தவத்திற்கு அனுப்பினாள் மாயையின் உபதேசப்படி சென்றபடியினாலே அசுரர்கள் அத்தனை பேருமே முருகப் பெருமானின் திருக்கை வேலினால் அழிந்தார்கள். காசிபருடைய உபதேசத்தைக் கேட்டிருந்தால் அசுரர் அத்தனைபேருமே தேவர்கள் நிலையை எய்தியிருப்பார்கள்.

## உபநிஷத்தில் காணப்படும் உபதேசம்

"ஆத்மாவே அறியத்தக்க பொருள். அதை அறிந்தபின் எல்லா இன்பங்களையும் பதங்களையும் அடைந்தவராகும்" என்ற உபதேசத்தைப் பிரஜாபதி ஒரு முறை தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் செய்தார் இதன் உண்மைப் பொருளை இரு பகுதியினரும் அறிய விரும்பினர். தேவர்கள் சார்பில் தேவேந்திரனும் அசுரர்கள் சார்பில் விரோசனனும் ஆத்மாவைப் பற்றி அறிந்துகொள்ள பிரஜாபதியிடம் சென்றனர். "ஆத்மா என்பது எது?" என்று கேட்டார்கள். "கண்களுக்குள் தோற்றப்படுபவனே ஆத்மா" என்றார்.



"ஜலத்தில் பார்த்தால் உருவம் காண்கிறோமே; கண்ணாடியிலும் காண்கிறோமே; அது யாருடையது? அவனும் ஆத்மா தானே" என்று கேட்டார்கள். ஆம் என்றார் பிரஜாபதி. தண்ணீர்க் குடத்தில் இருவரும் தமது நிழலைப் பார்த்தார்கள். விரோசனன் தான் ஆத்மாவைக் கண்டுவிட்ட திருப்தியுடன் பிரஜாபதியிடம் விடைபெற்றுக்கொண்டு சென்றான். தான் கற்றதைப்போதித்தான். "சரீரமே ஆத்மா; அதற்கே சேவைசெய்யுங்கள். பூசிக்கத்தக்கதுதேகமே;அதைச் சரியாக உபாசித்தால் எல்லாச் சுகமும் அடைவோம்" என்று அவர்களுக்கு உபதேசித்தான்.

அசுரத் தன்மை கொண்டவர்கள், "தானம் தருமம். பூசை, வேள்வி இவைகளில் ஏதும் பயனில்லை. உடலைத் தவிர வேறு எதையும் கவனிக்க வேண்டியதில்லை" என்பார்கள்.

தேவேந்திரன் ஆழ்ந்த சிந்தனையுடன் சிறிது தூரம் நடந்தான். தான் கண்டது நிழல்தானே என்ற சந்தேகத்துடன் குருவிடம் திரும்பினான். நான் இந்த உடல் அல்ல; நான் மனம் அல்ல; நான் அந்தக் கரணங்களும் அல்ல என்று பல ஆண்டுகள் குருவிடம் சேவை செய்து ஆத்மவித்தையைத் தெரிந்து கொண்டான் இன்றும் நம்மிடையே நிழலைத் தூரத்தியோடும் அசுரபுத்தி படைத்தவர்களைக் காண்கின்றோம். எம்மில் அதிக தொகை உடையவர்கள் அந்தகையவர்களேதான்.

இன்றைய கணக்கின்படி உலகத்திலே நானூறு கோடிக்கு மேற்பட்ட மக்கள் வாழுவதாகக் கணக்கெடுத்துள்ளார்கள். இவர்கள் எல்லோரும் உருவத்தால் மனிதர்களே. உள்ளத்தால் எத்தனை பேர் மனிதரோ யாமறியோம். இறைவனிடத்தில் அன்பு செய்வது என்றால் இறைவன் உறைவிடமாகிய உயிர்

களிடத்தில் அன்பு செலுத்துவதே ஆகும். உயிர்களிடத்தில் அன்பில்லாதவர் இறைவனிடத்தில் அன்பில்லாதவர். "நடமாடுங் கோயில் நம்பர்க்கொன் றீயில் படமாடுங் கோயில் பரமர்க்கங் காகும்" என்பது திருமந்திரம்.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமையான்."

என்பது திருக்குறள். பிறப்பு வேறு; செயல் வேறு செயலைப் பொறுத்ததே சிறப்பு.

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தந்தம்
கருமமே கட்டளைக்கல்" என்பது வள்ளுவம்.

நல்ல குணமுடையவர்கள் என்ற பெருமைக்கும், கெட்ட குணமுடையவர்கள் என்ற சிறுமைக்கும் அவரவர்களுடைய செய்கைகளே மாற்றறியும் உரைகல்லாகும். குணம், குற்றம், பெருமை, சிறுமை என்பதெல்லாம் அருள்குணமாகிய அன்புள்ளவராக இருப்பதையும் இல்லாததையும் பொறுத்ததே. ஆகையினால் அன்பில்லாதவர்களிடத்தில் நம்பிக்கை வைத்துவிடக்கூடாது. மனித வர்க்கத்தை நன்கு உய்த்துணர்ந்த பெரியார் ஒருவர் பின்வருமாறு கூறுகின்றார்.

"மனிதரிலும் பறவையுண்டு விலங்குண்டு
கல்லுண்டு மரமுண்டு
மனிதரிலும் நீர்வாழும் சாதியுண்டு
அநேக குல மனிதருண்டு
மனிதரிலும் மனிதருண்டு வானவரும்
மனிதராய் வருவதுண்டு
மனிதரிலே பிறப்பறுக்க வந்ததே
அருமையென வகுத்தார் முன்னோர்"



மனித கூட்டத்துக்குள்ளே மனிதரைத் தேடி அலைந்த மகாத்மாக்களுடைய சரித்திரங்களும் உண்டு. உண்மை மனிதனைக் காட்டும் கண்ணாடி ஒன்று கண்டுபிடிக்கப்படுமானால் நம்மவரில் எத்தனை பேர் மனிதப் பண்போடு வாழுகின்றோம் என்பதை விரல் மடித்தே எண்ணிவிடலாம்.

உலகத்தில் விஞ்ஞான வளர்ச்சியில் மெய்ஞ்ஞான ஆராய்ச்சி குன்றிவருகிறது. அன்பு சுருங்கி அறிவு வளருகிறது. மனிதன் பறவையைப் போல் பறக்கிறான்; மீனைப் போல் நீந்துகிறான்; ஆனால் மனிதன் மனிதனைப் போல் வாழவில்லை. இஃது இன்றைய உலகப் பொதுநிலை.

# மனித வரலாறு

மனிதனைப் பற்றி மனிதன் என்ன நினைக்கிறான் என்பதை ஆராய்ந்து பார்த்தால் அது வேடிக்கை நிறைந்த ஆராய்ச்சியாக இருக்கும். மனித வரலாறு பற்றி ஆராய்ந்த அரேபிய வித்துவான் ஒருவர் மனித வரலாற்றை மூன்றே மூன்று சொற்களில் கூறி முடித்துள்ளார். பிறந்தான்; இருந்தான்; இறந்தான் என்பவையே அம் மூன்று சொற்களுமாகும். உலகத்தில் நானூறு கோடி மக்கள் இருந்தால், மனிதனைப் பற்றிய அநுபவமும் அபிப்பிராயமும் நானூறு கோடி வகையினதாகவே அமையும்.

'ஹெரோடோட்டல்' என்பவர் "வரலாற்றுக் கலையின் தந்தை" என்ற புகழ் பெற்றவர். மனித வரலாறு என்பது இறைவன் நடாத்துகிற ஒரு நாடகம் என்பதை அவர் வற்புறுத்துகிறார்.

துசிடைடிஸ் என்ற வரலாற்று ஆசிரியர் மனித வாழ்க்கையில் இறைவனுடைய கைவண்ணத்தை என்னால் பார்க்க முடியவில்லை. மனிதவரலாற்றில் மனிதன் வளர்ந்து கொண்டே வந்திருக்கிறான் என்று கூட என்னால் சொல்ல முடியவில்லை என்று முடிவு கட்டுகிறார். மனித வாழ்க்கை ஓர் அவல நாடகமாகவே அவர் கண்ணுக்குப்படுகிறது. மனித வாழ்வு இழிந்த நிலையிலிருந்து கொண்டே இருக்கிறதென்றும், அபூர்வமாகச் சிற்சில சமயங்களில் சில பெரியார்கள் பிறந்து அதைப்புனிதப்படுத்துகிறார்கள் என்றும் அவர்கள் மறைந்தபின் மனித வாழ்வு மறுபடியும் தனக்கே உரிய இழிநிலையை அடைந்து விடுகிறதென்றும் அவர் நினைக்கிறார்.

காந்தி அடிகள் நம்மைவிட்டு மறைந்து முப்பத்தைந்து ஆண்டுகள் கூட ஆகவில்லை. அவரையும் அவரது கொள்கைகளையும் மறந்து விட்டோம்.

'எபிக்யூரஸ்' என்ற தத்துவஞானி. இன்னொரு கோணத்திலிருந்து மனிதனைப் பார்க்கிறார். கடவுள் இருக்கத்தான் செய்கிறார். அப்பாலுக்கப்பால் விண்மீன்களுக்கிடையில் ஆனந்தமான அமரத்துவநிலையில் அவர் சொகுசாக வாழ்கிறார். மிக்க புத்திசாலி அவர். ஆகையால் கொசுக்கள் போலிருக்கும் அற்ப மனிதர்களைப் பற்றி அவர் கவலைப்படுவதில்லை. இந்தப்பூமி அவரால் படைக்கப்படவுமில்லை; அவர் தலைமையில் இப்பூமி இயங்கவும் இல்லை. இன்பவடிவமாக இருக்கும் அக் கடவுள் வேதனையும் அழுகும்; ஒழுங்கீனமும் ஒழுக்கமும் மலிந்து குழம்புகின்ற இப்புன்மை உலகத்தை எப்படிப் படைத்திருக்க முடியும்.

இப்படியெல்லாம் சொல்லிவிட்டு மனிதனுக்கு ஆறுதல் தரக்கூடிய சில கருத்துக்களையும் அவர்



சொல்லுகிறார். கடவுள் பூமிக்கு வெகு தூரத்தில் இருப்பதால், அவரால் உங்களுக்கு நன்மையைத் தரவும் முடியாது உங்கள் நடத்தையை அவரால் கவனிக்கவும் முடியாது. ஆகவே உங்கள் நடத்தையைப்பற்றித் தீர்ப்புச் சொல்லவும் உங்களை நரகத்தில் தள்ளவும் அவரால் முடியாது.

# உடலும் நிழலும்

இது மறு பிறப்பைப்பற்றி இராஜாஜி அவர்கள் எழுதிய ஒரு கதை. இருதய வியாதி உள்ள ஒருவருக்கு திருப்பதியில் பைராகி ஒருவர்மூலம்நோய்க்கு மருந்தாக ஐந்து குளிகைகள் கிடைத்தன. அந்தக் குளிகைக்கு இரண்டு சக்திகள் உண்டு. நோய்க்கு மருந்தாவதோடு எதிரே நிற்கும் ஆளின் நிழலில் அவரது முற்பிறப்பையும் காட்டும் சக்தி வாய்ந்தது.

முதலாவது குளிகை வாயில் போட்ட உடனே பைராகியின் நிழலில் தனது தாயின் தோற்றத்தைக் கண்டார். பைராகியே அதற்கு மறுமொழியும் சொன்னார். சென்ற பிறப்பில் நான் தான் உனது தாயாக இருந்தேன். அந்தப் பாசம்தான் இந்த மருந்தையும் கொடுக்கச் செய்தது. பரம்பொருள் ஒன்றே உண்மைப் பொருள். அதுவே பலவாகக் காட்டிக் கொள்கிறது. முன்ஜென்மங்கள் உயிர்களை நிழல் போல் தொடர்ந்தே வருகின்றன.

ஒருநாள் அவருக்கு வைத்த பாலை அவர் வீட்டுப் பூனை குடித்துவிட்டது. பாலைக் குடித்ததோடு பாத்திரத்தையும் உருட்டி விழுத்தி விட்டது. விஷயத்தைப் புரிந்து கொண்ட அவருக்குப் பூனையின் மீது அசாத்தியக் கோபம் வந்து விட்டது. அதனால் மாரடைப்பும் வந்து விட்டது. உடனே குளிகையை வாயில் போட்டுக் கொண்டார். எதிரே நின்ற பூனையின் நிழலில் இறந்து போன மனைவியின் உருவத்தைக் கண்டார். எந்தப் பூனையின் மேல் அசாத்தியக் கோபம் ஏற்பட்டதோ அதனை இப்போ எடுத்துக் கொஞ்சிக் குலாவினார். அதன்பின் அவருக்குப் பூனை பூனையாகத் தெரியவில்லை. இறந்து போன மனைவியாகவே காணப்பட்டது.

கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்த்த பணத்தை வட்டி ஆசையினால் காசி விசுவநாதன் என்றவரிடம் வட்டிக்குக் கொடுத்தார். அவனோ அயோக்கியன். வாங்கின பணத்தையோ வட்டியையோ கொடுக்கும் நோக்கம் இல்லை. பொலீசின் உதவியுடன் ஆளைப் பிடித்து வந்து பஞ்சாயத்தார் முன்பு நிறுத்தினார். அவனோ பணம் பெறவில்லை என்று சாதித்தான். இவருக்கோ அடக்க முடியாத ஆத்திரம் வந்தது. அது மார்படைப்பைக் கொண்டுவந்து விட்டது. சட்டைப் பையில் ஆயத்தமாக இருந்த குளிகையைப் போட்டுக் கொண்டார். காசிவிசுவநாதனின் நிழலைப் பார்த்தார். என்ன ஆச்சரியம் தந்தையின் உருவம் தோன்றியது. இளம் வயதிலே தந்தைக்குத் தான் செய்த துன்பங்களையும் அவருக்குத் தான் கொடுக்க வேண்டிய கடன்களையும் பற்றி எண்ணிப் பார்த்தார்.

ஒருநாள் வேட்டையாடப் புறப்பட்டு நண்பருடன் கொக்கு வேட்டையாடினார். ஒரு கொக்கை மாத்திரம் இவர்களால் சுட முடிந்தது. அலைந்து



திரிந்ததனால் மாரடைப்பு வருவதற்கான அடையாளங்கள் தெரிந்தன. உடனே குளிகையை எடுத்து விழுங்கினார். சுட்ட கொக்கை வேலைக்காரன் தலைகீழாகப் பிடித்திருந்தான். என்ன ஆச்சரியம் அந்த நிழலில் சமீபத்தில் இறந்த அவரது குழந்தையின் நிழல் தெரிந்தது. தன் குழந்தைக்குத் தானே இயமனாக வந்தது பற்றிக் கவலை கொண்டார். கவலைப்பட்டு என்ன பிரயோசனம்? இறந்த குழந்தை திரும்பி வரமுடியுமா? இக்கதையின் உள்ளுறை பெரியதொரு படிப்பினையாகும்.

முன் ஜன்மத்தில் நாம் யாராக இருந்தோமோ அடுத்த ஜன்மத்தில் யாராக பிறப்போமோ; யாருக்கும் தெரியாது. யாரும் எந்த குலம் எந்தச்சாதி என்பது நிச்சயமில்லை. நாம் அனைவரும் ஆண்டவனுடைய மக்கள். ஆகவே சண்டை சச்சரவுக்கு நாமேன் இடம் கொடுக்கவேண்டும்.

“தன்னுயிர்போல் மன்னுயிரையும் நினைக்கும் பழக்கத்தை எல்லாரும் வளர்த்துக் கொள்ளுதல் வேண்டும். அதனால் எல்லோரும் ஒரு குலம் எல்லோரும் ஒரு இனம் என்ற ஞானம் பிறக்கும். அந்த ஞானம் பிறந்துவிட்டால் வாழ்வில் கவலை ஏது? துன்பம் ஏது?

# அன்பும் அறமும்

உயிருக்கு இயல்பான பண்பு அன்பு. அதை நாம் குழந்தையிடத்துக் காணலாம். பணக்கார வீட்டுக்குழந்தை ஏழை வீட்டுக்குழந்தையோடு அன்பு பாராட்டுகிறது. ஆனால் ஆணவம் மிக்க பெரியோர்கள் அவ்வன்புக்குத் தடைபூட்டுகின்றார்கள். அப்பெரியோர்களோடு பழகப்பழக அன்பு சுருங்குகிறது. அவ்வன்பு சுருங்காமல் பெருகுவதற்கு நூலோர் அறநெறியை போதித்திருக்கிறார்கள்.

ஆகவே தான் வள்ளுவர்,

*"அறத்திற்கே அன்பு சார்பென்ப அறியார்*
*மறத்திற்கும் அஃதே துணை"*

என்றும் பாடினார்.

தர்மமான நல்ல காரியங்களைச் செய்வதுதான் அன்பு என்பதைச் சேர்ந்தது. அதர்மமான தீய காரியங்களையும் அன்புக்காகச் செய்யலாம் என்பவர்கள் அறியாதவர்கள். எந்த நிலையிலும் அன்பின் இன்றியமையாமையைக் கூறி, அன்பும் அறமும் பண்பும் பயனும் எனப்பின்னிக்கிடப்பதை வள்ளுவர் வலியுறுத்தியுள்ளார்.

*"சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு*
*ஆக்கம் எவனோ உயிர்க்கு"*

அறமாகிய நல்ல காரியத்தைச் செய்வதைக் காட்டிலும் நல்லதும் வேறில்லை. அதை மறந்துவிடுவதைக்காட்டிலும் கெடுதி உண்டாக்கக் கூடியதும் வேறில்லை.



அறம் செய்வதனால் நன்மைகள் உண்டாகும் என்பது எல்லாச்சமயத்தாரும் ஒப்புக்கொண்ட முடிவாகும். அதை மறந்துவிடுவதால், அந்த நன்மைகள் உண்டாவதுதானே இல்லாமற்போகும். கேடு எப்படி வரும் என்ற சந்தேகம் உண்டாகலாம். பல நாள் அறம் செய்கிறவனும் கூட ஒரு நாள் அதை மறந்து கடமையில் தவறுவானாகில் அந்தச் சமயம் பார்த்து காத்துக் கொண்டிருக்கிற அறவாழ்வின் பகைவர்களாகிய கெட்ட எண்ணங்கள் புகுந்து அதுவரையிலும் அவன் செய்த அறங்களின் பயன்களையும் அழித்து விட்டு கூடிய தீய ஒழுக்கத்திற்கு ஆளாக்கி விடலாம்.

*"அற நெறி முதற்றே அரசின் கொற்றம்"*

எனச் சங்கநூலும்

*"அற நெறி பிழைத்தார்க்கு அறம் கூற்றாதல்"*

சிலப்பதிகாரமும்

*"அருள் தரும் திறத்து அறனன்றிவலிய துண்டாமோ"*

எனக் கம்பரும்

*"தர்மத்தை நாம் காப்பாற்றினால் தர்மம் தலைகாக்கும்"*

என்று வியாசரும்

*"யாவர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை*
*யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை*
*யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி*
*யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே"*

என்று திருமூலரும்,

*"அறம் வளர்ந்திடுக தீமைகள் மாய்க"*

என்று பாரதியும் மற்றும் பலரும் அறத்தின் திறத்தை வலியுறுத்தியுள்ளார்கள். ஆகவே சமயங்களின் உயிர்நாடிகளாக அன்பும் அறமும் இடம்பெற்றிருக்கின்றன.

# உயிருக்கும் இறைவனுக்குமுள்ள தொடர்பு

உடல் அறியாமல் இருப்பதற்கு எப்படி உடல் வேறு தான் வேறு என்று இராமல் உயிர் அதனோடு கலந்து அவ்வுடலேயாக நிற்கின்றதோ அப்படி உயிர் நிலைத்தற்காக இறைவன் உயிருடன் கலந்து உயிரேயாக நிற்பது ஒரு நிலை. இதனால் உயிர் முதல்வனையும் நில்லாது. அவனின்றித் தனித்தும் நில்லாது என்பது பெறப்பட்டது.

கண் எப்படி சூரியனின் ஒளியின்றித் தானே ஒரு பொருளைக் காண இயலாவிடினும் கண் வேறு, சூரியன் வேறு என்று எப்படி நாம் உணருகிறோமோ அப்படி உயிர்கள் முதல்வன் அறிவித்தாலன்றித் தாமே அறிய இயலாவிடினும், முதல்வன் வேறு—உயிர் வேறு என்பதை உணர வேண்டும்.

ஒரு பொருளைக் காணும் போது எப்படிக் கண்ணொளியும், உயிரறிவும் உடன் நின்று பொருளிடம் செல்லுகின்றனவோ, அப்படி இறைவன் உயிர்க்குயிராய் நின்று, உயிர்வேறு தான் வேறு என்ற வேறுபாடின்றி இன்ப துன்பங்களுக்குக் காரணமான விடயங்களில் செல்லுகின்ற நிலை மற்றொன்று. இது இறைவன் எங்கும் நிறைந்திருத்தலால், தான் செல்லாமல் நின்ற நிலையிலேயே ஆங்காங்குள்ள உயிர்களோடு பிரிப்பின்றி நிற்றலைக் குறிக்கும்.

இறைவன் உயிரோடு ஒன்றாய் நிற்கிறான்; வேறாய் நிற்கிறான்; உடனாய் நிற்கிறான். அரக்கை உருக்கி, உருக்கப்பட்ட அவ்வரக்குடன் கற்பொடியைச் சேர்த்தால் அக்கற்பொடியானது அரக்கோடு ஒன்றி நிற்கும். அது போல இறைவனும் உயிரோடு ஒன்றி நிற்பன். உருக்கப்பட்ட அரக்கினின்றும்



கற்பொடியைப் பிரிக்கமுடியாவிட்டாலும், கற்பொடி தனித்துக் காணப்படுகின்றது. அதுபோல் இறைவன் உயிரினின்றும் வேறாகக் காணப்படுகின்றான். அரக்கு முழுவதும் கற்பொடி காணப்படுவதால் அரக்கோடு கற்பொடி உடனாய் நிற்கிறது. அதுபோலவே இறைவனும் உயிரோடு உடனாய் நிற்கின்றான்.

சூரியனுக்கு நீண்ட நாட்களாக ஒரு ஆசை. இருளை ஒருமுறை பார்த்துவிட வேண்டும் என்பது தான் அந்த ஆசை. உலகம் தோன்றிய காலந்தொட்டு சூரியன் கிழக்கிலிருந்து மேற்காக இருளைத் துரத்திக்கொண்டே செல்லுகின்றான். இருளோ மேற்கிலிருந்து கிழக்காக ஓடிக்கொண்டே இருக்கிறது. இந்த ஓட்டப் பந்தயத்தில் வெற்றியும் இல்லை; தோல்வியும் இல்லை. இதே போன்று பதியாகிய சூரியனைக் கண்ட உடனே பாசமாகிய மல இருள் ஓடிச்சென்று மறைந்து விடுகின்றது.

ஆந்தைகள் எல்லாம் சேர்ந்து ஒருமுறை ஒரு மகாநாடு நடாத்தின. அதில் குஞ்சு முதல் கிழம் ஈறாக எல்லா விதமான ஆந்தைகளும் கலந்துகொண்டன. ஒரு ஆந்தை எழுந்து ஒரு செய்தியை எல்லாருடைய காதிலும் கேட்கத்தக்கதாகக் கூறியது. இந்த மனிதர்கள் அடிக்கடி சூரியன் என்ற பொருளைப் பற்றிப் பேசிக்கொள்ளுகின்றார்களே, அப்படி ஒரு பொருள் இருந்தால் ஏன் நமக்கு அது தெரியவில்லை. நீங்கள் யாராவது அந்தப் பொருளை நேரில் பார்த்ததுண்டா? என்று வினவியது. எல்லா ஆந்தைகளும் ஒரே குரலில் சூரியன் என்றொரு பொருள் இல்லை. இது மனிதன் சொல்லும் பொய்யில் மிகப் பிரமாண்டமான பொய் என்று எல்லா ஆந்தைகளும் ஏகோபித்தனமாகக் கூறின. ஆந்தைகளின்

மகாநாடும் அத்துடன் கலந்தது. இன்றுவரை எந்த ஆந்தையாவது சூரியனைக் கண்டதாகச் சரித்திரத்தில் இல்லை.

ஆந்தைகளுக்குச் சூரியனைப் பார்க்கின்ற கண் இல்லை. அதனாலே அவைகளால் சூரியனைப் பார்க்க முடியவில்லை. இதே போன்று எமக்கும் ஆண்டவனைப் பார்க்கின்ற ஞானக்கண் இல்லை. அதனால் ஆண்டவனே இல்லை என்று கூறிவிடலாமா?

வீட்டுக்கு ஒளிதரும் விளக்கே வீட்டை எரிக்கவும் செய்யும். உணவை சமைக்க உதவும் நெருப்பே உணவுப் பொருட்களை நாசமாக்கவும் கூடும். காலத்தில் பெய்து பயிரை வாழ்விக்கும் மழையே உரிய காலத்திற் பெய்யாமையால் நாட்டை நாசமாக்கவும் கூடும். நல்லோர் பகலை விரும்புவது போல பொல்லார் இரவை விரும்புவர். யோகி சாதனைக்கு இரவைப் பயன்படுத்துகிறான். போகி தனது சிற்றின்பத்திற்காக இரவைப் பயன்படுத்துகிறான்.

மனிதனுக்குப் பற்றுதலால் விருப்பமும், விருப்பத்தால் சினமும், சினத்தால் மயக்கமும், மயக்கத்தால் புத்தி நாசமும், புத்தி நாசத்தால் அழிவும் ஏற்படுகின்றது.

அறியாமை என்பது இருள். அறியாமையைக் காட்டிலும் கொடிய பகை வேறு எதுவும் இருக்க முடியாது. அறியாமையைக் காட்டிலும் இழிவான அடிமைத்தனம் வேறு கிடையாது. அறிஞனுக்கு முன்னே அறியாமையிருந்தவன் கூனிக்குறுகி நிற்கிறான்.



சவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள் — சபை நடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டாதவனே நன்மரம்.

என்றார் ஒளவையார். கண்ணிரண்டே யாவர்க்கும் கற்றோர்க்கு மூன்றுவிழி என்றார் இன்னோரிடத்தில். கல்வியழகே அழகு என்று பிறிதோரிடத்திலும் காணப்படுகின்றது.

அறியாமையாகிய இருள் இரகசியத்தின் தாய்; துன்பத்தின் பிறப்பிடம்; குருட்டு நம்பிக்கையின் அன்னை; சங்கடம் தோன்றிய இடம்; அறிவும் வறுமையும் வாழும் தாயகம் என்பது இங்கர்சாலின் பொன்மொழிகள்.

"முடியாதது ஒன்றை எதிர்பார்ப்பது அறியாமையாகும். துராத்மாக்கள் தங்களுடைய இயற்கைக்கு மாறாய் நடந்து கொள்பவர்கள் என்று எதிர்க்க வேண்டாம்." இது மார்க்க அரேலியரின் உபதேசமாகும்.

## பகலும் இரவும்

பகல் என்பது நினைப்பு; இரவு என்பது மறப்பு. பகல் என்பது பிறப்பு; இரவு என்பது இறப்பு.

"உறங்குவது போலுஞ் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு"

உயிர் அழிவற்றதாயினும் உடல் நிலையில்லா தது. அந்த நிலையாமையை உணர்ந்து இந்த உடல் இருக்கிற போதே புண்ணியங்களைச் செய்தால் இந்த உடலைவிட்டு அந்த உயிர் பிரிந்த பின்பு அதற்கு இதைக் காட்டிலும் நல்ல உடல் கிடைக்கும் அல்லது பிறவாமை கிடைப்பினுங் கிடைக்கும்.

பகலானது உலகத்தோடு ஒட்டி வாழ்ந்து கொண்டே போகிற நிலை. இரவாவது செயலை மறந்து தூக்கத்திற்குள் அடங்கி கிடக்கிற நிலை. இந்த இரண்டு நிலையும் நமக்குப் பயன் ஒன்றையும் அளிக்கவில்லை. பகலும் இரவும் நாம் ஓயாமல் ஒழியா மல் வேலைசெய்கிறோம். இரவில் படுத்துத் தூங்கு வதும் ஒரு வேலைதானே? அவை உயிருக்கு நன்மை செய்யும் பயனை அளிப்பதில்லை.

''இரவும் பகலும் இதயத்துள்ளையே
பரவும் அறிவும் பணியுந்தருவாய்''

என்பது ஒருவருடைய வேண்டுதலாகும்.

''துன்பமின்றித் துயரின்றி என்றும் நீர்
இன்பம் வேண்டில் இராப்பகல் ஏத்துமின்''

என்பது அப்பர் சுவாமிகளின் அறிவுரை.

**இதுவே ஏற்ற அறிவுரையுமாகும். உடலால் அநுபவிக்கப்படுவது துன்பம். மனதால் அநுபவிக் கப்படுவது துயரம். இரவிலே உடலால் துன்பமில்லை யாயினும் உள்ளத்தால் அநுபவிக்கப்படும் துயரங் கள் கணக்கிலடங்கா.**

**உலகில் பல துன்பங்களுக்கு ஆளானவனுக்கு ஒரு சந்தேகம் எழுவது இயற்கை. உலகில் இன்பம்**



என்பதொன்று முயற்கொம்பு போல இல்லவே இல்லை யோ? என்று வினவுவார்களுக்கு அப்பர் சுவாமிகள் விடை கூறுகின்றார். இன்பம் உலகில் இருக்கத்தான் செய்கிறது. துன்பக்கடலைக் கடந்து கரை ஏறி நீங்கள் அழியாத நித்திய இன்பத்தை அடைய வேண்டுமானால் சிவபெருமானை இடைவிடாது சிந்தனை செய்யுங்கள். இரவும் பகலும் தொடர்ந்து துதியுங்கள். சிவன் என்பதற்கு இன்பத்தைச் செய் பவன் என்பதுதான் பொருள். அவன் அடியார் களுக்கு அன்பனாகி விடுவான். அதைவிட இன்பம் வேறு என்ன இருக்கிறது. அதுவே பேரின்பம்.

ஒரு சாதுவுக்கு ஒரு சீடன் இருந்தான். ஒரு நாள் இரவு சாது சீடனிடம் ''நாளைக்காலையில் நல் லூர் வரையில் போகவேண்டும்'' என்றார். மறுநாள் காலையில் 9 மணி அளவில் சீடன் சாதுவின் முன் வந்து நின்றான். அவன் காலில் முழங்கால்வரை புழுதி படிந்திருந்தது. ''எங்கே போயிருந்தாய்'' என்று கேட்டதற்கு அவன் நல்லூர்வரை போயிருந் தேன் என்று கூறினான். சாது உத்தரவிட்டது உண் மைதான். ஆனால் அவன் செய்தது பயனில்லாத காரி யம். ''எதற்காக போக வேண்டும்? யாரைப்பார்க்க வேண்டும்?'' என்று கேட்டுக்கொள்ளாமல் அவன் நல்லூருக்குப் போய் வந்ததால் பயன் என்ன?

இப்படியே நாம் சுறுசுறுப்பாக எத்தனை தான் வேலைசெய்தாலும் அதனால் இன்பம் வராது. பகல் முழுதும் உத்தியோக சம்பந்தமாகவோ வீண் காரி யங்கள் சம்பந்தமாகவோ நம்முடைய உழைப்பை எல்லாம் ஈடுபடுத்திவிடுகிறோம். ஆத்மாவிற்கு இன் பத்தைத் தரக்கூடிய காரியம் ஒன்றைக்கூடச் செய் வதில்லை. ஆத்மாவின் நிழல்தான் உடம்பு. உடம் புக்கே எல்லாச் செயல்களும் நடைபெறுகின்றன.

மகன் ஒருவன் வெளிநாட்டில் உத்தியோகமாய் இருக்கிறான். பாடுபட்டு உழைத்தான். தாய் தந்தையருக்கு நூறு ரூபாய் அனுப்பினால் தபால் சேவகன் காசுக் கட்டளையைக் கொண்டு வந்து கொடுத்தான். அந்தப் பெற்றோர் காசு அனுப்பிய மகனுக்கு நன்றி செலுத்தாது காசுக்கட்டளையைக் கொண்டு வந்து கொடுத்த தபால் சேவகனுக்கு நன்றி செலுத்துவார்களேயானால் அவர்கள் அறிவு எப்படிப்பட்டதாக இருக்கும் என்பதை எண்ணிப்பாருங்கள்.

## பாசிபடர்ந்த குளம்

தண்ணீர் இல்லாத குளம் ஒன்று. தண்ணீர் இருந்தும் பாசி மூடிக்கிடக்கிற குளம் ஒன்று. பாசியே இல்லாமல் படிகம் போலத் தெளிவான நீர் உள்ள குளம் ஒன்று. இவை மூன்றும் இருக்கின்றன. தண்ணீரே இல்லாத குளத்தால் பயன் இல்லை. பகுத்தறியும் ஞானம் இல்லாத விலங்கினங்கள் இந்த இனத்தைச் சார்ந்தவை. தெளிவான தண்ணீரை உடைய குளத்தைப் போன்றவர்கள் ஞானிகள். அவர்கள் எப்போதும் மாயையாகிய பாசி மூடாத ஞானம் உடையவர்கள். மற்றவர்கள் பாசி மூடிய குளம் போன்றவர்கள். பாசியை அகற்றிவிட்டால் குளத்து நீர் தெளிவடையும். ஞானம் இருந்தும் மாயையினால் மூடப்பட்டு இழி செயல்கள் செய்து வருகிற நம்முடைய நிலை தண்ணீர் இருந்தும் பாசி மூடிய குளத்தைப் போன்றது.



நம் உள்ளத்தில் எப்போதும் தெளிவு இல்லை என்று சொல்வது தவறு. வாழ்க்கை நிலையற்றது என்பது நமக்கு விளங்குகிறது. சுடுகாட்டைப் பார்க்கும் போது நாமும் இறந்துபடுவோம் என்று உணர்கிறோம். மரணமில்லாப் பெருவாழ்வு வாழ வகையுண்டு என்று பெரியவர்கள் சொல்லும் போது நமக்கு அது உண்மை எனச் சிலசமயம் விளங்குகிறது. ஆனால் அதற்கு ஏற்றவகையில் உழைக்கும் ஆற்றல் நமக்கு இல்லை. முயற்சி செய்யத்துணியும் அறிவு தோன்றினாலோ அடுத்த விநாடியே மாயை என்னும் பாசி மூடிக்கொண்டுவிடுகிறது.

''ஆண்டவனே உன் அருள் தர வேண்டும்'' என்று வேண்டும் உணர்வு சில சமயங்களில் பிறக்கிறது. அது எப்போதும் உறுதியாக உள்ளத்தில் நிற்பதில்லை. அடுத்த கணத்தில் மறைந்து போகிறது. இந்த மறைப்பைத் திரோதாயி என்று சொல்லுவார்கள். ஆண்டவன் அருளால் இந்த மாயை நீங்க வேண்டும். அவனைச் சரண் புகுந்தால்தான் அவன் அருள் கிடைக்கும்.

# மனம் போல வாழ்வு

இதனை மனம்போல மாங்கல்யம் என்றும் சொல்வார்கள். பிறருக்கு நன்மை நினைப்பவன் நன்மை செய்பவன் தானே நன்மை அடைகிறான். பிறருக்குத் தீமை நினைப்பவன் தீமை செய்பவன் தீமையைத் தானே அனுபவிக்கிறான்.

''யத்பாவம் தத்பவதி'' என்று வடமொழியில் ஒரு வாக்கியம் உண்டு.

சீனு தேசத்தில் ஒருவனுக்கு ஓர் அருமையான கண்ணாடி கிடைத்தது. அத்தேசத்தில் அப்போது கண்ணாடி என்பதே இல்லாத காலம். அவன் அதைப் பார்த்தான். அவன் முகம் தெரிந்தது. தன்னுடைய முகந்தான் அதில் தெரிகிறது என்பது அவனுக்குத் தெரியவில்லை. ''இதற்குள் ஒரு மனிதன் இருக்கிறானே, இவன் தான் தேவன் போலும்'' என்று எண்ணி அந்தக் கண்ணாடியை மிகவும் பத்திரமாகத் தன் பெட்டிக்குள் வைத்துப் பூட்டிக்கொண்டான். மனைவி கண்டுவிட்டால் அவனை அவள் விரும்பக்கூடும் என்ற ஐயமும் அவன் உள்ளத்தில் எழுந்தது.

தினந்தோறும் காலையில் எழுந்திருப்பது. மெல்ல அறைக்குள் தன் மனைவிக்குத் தெரியாமல் நுழைந்து பெட்டியைத் திறந்து கண்ணாடியைப் பார்ப்பது. மனைவி வந்துவிட்டால் பெட்டியை மூடிக்கொண்டு வந்துவிடுவது. இப்படிச் செய்துகொண்டிருந்தான். இதனால் அவனுடைய உள்ளத்தில் ஒரு பதட்டம் ஏற்பட்டிருந்தது. அவனுடைய செய்கையைக் கண்டு அவன் மனைவிக்கு ஐயம் உண்டாயிற்று. அகத்திலுள்ளதை முகம் காட்டிவிடும்



அல்லவா? தன் கணவன் பெட்டியில் எதை ஒளித்து வைத்திருக்கிறான். எதற்காக இப்படி ஒளிந்து ஒளிந்து அறைக்குள் போகிறான் என்று அறிய வேண்டுமென்ற அவா அவளுக்கு உண்டாயிற்று.

ஒரு நாள் அவன் வீட்டில் இல்லாதபோது அவ்வறைக்குள் நுழைந்து பெட்டிக்கு மறு சாவி போட்டுத்திறந்து பார்த்தாள் அதற்குள் பளபள என்று கண்ணாடி இருந்தது. அது கண்ணாடி என்று அவளுக்கும் தெரியவில்லை. சட்டெனக் குனிந்து பார்த்தாள். அவள் முகம் அதில் தெரிந்தது. அவளுக்கு அது தன்னுடைய முகம் என்று உணரக்கூடிய அறிவும் இல்லை. தன் கணவன் வேறுயாரோ ஒரு பெண்ணுடன் சிநேகிதமாய் இருக்கிறான் என்பதை கற்பனை பண்ணிக்கொண்டாள். ஒரு பெண் எதையும் தாங்கும் பொறுமைசாலியாக இருப்பாள். ஆனால் தன்கணவன் தன்னைத்தவிர வேறுயாருக்கும் சொந்தமாக இருப்பானானால் அதனைக் கணப்பொழுதுதானும் தாங்கும் இதயம் அவளிடத்து இருக்க முடியாது. கணவனிடம் அவளுக்கு எல்லையற்ற கோபம் உண்டானது. ''ஒன்று என் சக்களத்தி இந்த வீட்டில் இருக்கவேண்டும்; அல்லது நான் இருக்கவேண்டும். இரண்டில் ஒன்று முடிவு செய்து விடுகிறேன்'' என்று எள்ளும் கொள்ளும் வெடிக்கப் பொரிந்து தள்ளினாள். கணவன் அன்று வந்ததும் வராததுமாக மிக்க ஆங்காரத்தோடு சண்டைக்குப் போய்விட்டாள்.

அன்றைக்கு அவள் கணவன் தன்னுடன் ஒரு புத்த பிக்குவையும் அழைத்து வந்திருந்தான். அவர் மிக்க பொறுமையாக ''ஏன் அம்மா இப்படி உன் கணவரிடம் கோபிக்கிறாய்? அவர் என்ன தப்புச் செய்தார்? என்னிடம் சொன்னால் நான் விசாரிக்கிறேன்'' என்றார்.

நீங்களே சொல்லுங்கள் இது நியாயமா? நான் இருக்கும் போது இவர் வேறு ஒரு பெண்ணை இந்த வீட்டில் கொண்டுவந்து வைத்துக்கொள்ளலாமா? என்று அந்த அம்மாள் கேட்டாள்.

நிச்சயம் வைத்துக்கொள்ளக் கூடாது. இவர் அப்படிச் செய்யக்கூடியவரல்லரே என்று கூறிய பிக்கு அவன் பக்கம் திரும்பிப் பார்த்தார்.

இவளை அன்றி வேறெந்த பெண்ணோடும் நான் பழகியதேயில்லை. நானாவது வீட்டில் இவளுக்குத் தெரியாமல் ஒரு பெண்ணைக் கொண்டுவந்து வைத்துக்கொள்வதாவது என்று பரிதாபமாகப் பேசினான் அவன். இதைக்கேட்டாளோ இல்லையோ அந்த அம்மாள் முன்னையும் விட அதிகம் கோபங்கொண்டாள்.

அழைத்துக்கொண்டு வந்து உள்ளே வைத்திருப்பதுமல்லாமல் பொய்யா சொல்கிறீர்கள்? சுவாமி நீங்களே உள்ளே வாருங்கள் நான் காட்டுகிறேன் என்று அந்த புத்தபிக்குவை உள்ளே அழைத்துக் கொண்டுபோய் கண்ணாடி உள்ள பெட்டியைக் காட்டினாள்.

பிக்கு அதைத் திறந்து பார்த்தார். கண்ணாடியில் அவர் முகம் தெரிந்தது. அவர் உடனே ஆச்சரியம் மிக்கவராய்க் கூவினார். ''அம்மா'' ''அம்மா'' இதோ பாருங்கள் அந்த அம்மாள் நம் எல்லோருக்கும் இரகசியம் தெரிந்து விட்டதென்று எண்ணி தன் தலையை மொட்டை அடித்துகொண்டு விட்டாள் என்றார்.



அவரவர்கள் பார்க்கின்ற போது வெவ்வேறு முகம் தோன்றியது. அந்தத் தோற்றத்திற்கு காரணம்! கண்ணாடியிலா இருக்கின்றது. பார்ப்பவர்களிடமும் இருக்கின்றது.

பச்சைக் கண்ணாடியைப் போட்டுக் கொண்ட ஒருவன் உலகத்தைப் பார்க்கிறான். பார்ப்பதெல்லாம் பச்சையாக இருக்கிறது. சிவப்புக் கண்ணாடியைப் போட்டுக் கொண்ட ஒருவன் உலகைப் பார்க்கிறான். பார்ப்பதெல்லாம் சிவப்பாகத் தெரிகிறது. கண்ணாடியில் உள்ள பிழையல்லவா.

இப்படி இந்த உலகமாகிய கண்ணாடியில் பார்க்கிறவர்கள் சிலருக்கு உலகம் முழுவதும் இன்பமாகக் காட்சியளிக்கிறது என்றால் அவர்களே இன்பத்தின் வடிவமாக இருக்கிறவர்கள். சிலர் உலகம் முழுவதும் துன்பம் நிரம்பி இருக்கிறதென்றால் அவர்களே துன்பத்தின் சின்னமாக இருக்கிறார்கள்.

தருமன், துரியோதனன் கண்ணன் மூவரும் நகரைச் சுற்றிப்பார்க்கப் புறப்பட்டார்கள். வீடு வந்து சேர்ந்ததும் தர்மனைப் பார்த்து கண்ணன் நகரம் எப்படி இருக்கிறது என்றான். மக்கள் எல்லாரும் நல்லவர்களாக இருக்கிறார்கள் என்றார். இதே கேள்வியை துரியோதனனிடமும் கேட்டு வைத்தார். நகரத்திலுள்ளவன் அத்தனைபேரும் போக்கிரிப்பயல்கள், ஒருவன்கூட நல்லவனில்லை என்றான் துரியோதனன்.

''உலகில் நல்லவர்களே இல்லை. திருடர்களும் நயவஞ்சகர்களும் நிரம்பி இருக்கிறார்கள் என்பவர்களே திருடர்களும் நயவஞ்சகர்களும். அதனால் தான் உலகத்திலுள்ளவர்களெல்லோரும் அவர்களுக்கு அப்படியே தோற்றுகிறார்கள். உலகிலுள்ளவர்கள் எல்லோரும் நல்லவர்கள். ஆண்டவன் குழந்

தைகள் என்று பார்க்கின்ற மக்களில்லையா. இப்படிப் பல வழியாகக் கூர்ந்து பார்த்தால் அவரவர்களின் உள்ளத்தின் பண்பே உலகத்தில் பிரதிபலிப்பதை உணரலாம்.

ஆகவே துன்பம் இன்பம் என்பவை அவரவர் களுடைய மனத்தின் பண்மையும் திண்மையையும் பொறுத்திருக்கின்றன. ஒருவன் மலைபோல இருக் கின்ற பொருளை பொடியைப் போல் இருக்கக் காண் கிறான். அணு அணுவான வேலைகளைக்கூட ஒருவன் மலைபோல எண்ணி மலைத்து நிற்கிறான். எல்லாவித மான இன்ப போகங்களும் நிரம்பப்பெற்ற மாளிகை யில் இருப்பவன் நரகத்தில் வாழ்பவனைப் போல அவதியுறுவதுண்டு. நரகத்தையே நல்லதாகப் பார்க் கிறவர்கள் இருக்கிறார்கள். மாணிக்கவாசகர் அத்த கையவர். இறைவனே உன் திருவருள் துணை எனக் கிருந்தால் நரகமானாலும் சரி அங்கே சென்று வாழ் வேன்'' என்று சொல்லுகிறார். ''நரகம் புகினும் எல்லேன் திருவருளாலே இருக்கப்பெறின்இறைவா''

இறைவன் திருவருள் இல்லாவிட்டால் இன்ப லோகம் நரகலோகமாகத் தோற்றுகிறது. ஒரு சிறு துரும்பும் கோடரியாக இருக்கிறது. இறைவனு டைய நம்பிக்கையோடு வாழ்பவர்களுக்கு நரகம் சுவர்க்கமாக இருக்கிறது. உலகிலுள்ளவர்கள் எல் லோரும் நல்லவர்களாக இருக்கிறார்கள்.. பெண்டு பிள்ளைகள் எல்லாரும் சொன்னதைக் கேட்பவர் களாக இருக்கிறார்கள்.



# உருவெளித் தோற்றம்

ஒருமுறை கண்ட உருவத்தை அந்த உருவம் இல்லாதபோது மனதிலே நினைவுக்கு கொண்டுவர முடியுமானால் அறிஞர்கள் அதனை உருவெளித் தோற்றமென்பர். பழகப்பழக நெஞ்சிலே தோற்றும் உருவமே கண்முன்னாலும் தோன்றும்.

காதல் மிகுந்தவர்களுக்குத் தம்முடைய காத லுக்கு உரியவர்களை உருவெளியாகக் காணுகின்ற நிலை வரும் என்று இலக்கியங்களில் காண்கிறோம். இராமாயணத்தில் இப்படி ஒரு காட்சி வருகிறது.

சூர்ப்பனகை இராமனைக் கண்டு ஆசை கொள் கிறாள். அவனை அணுகிய போது இலட்சுமணனால் ஒறுக்கப்பெற்றுத் திரும்புகிறாள். இராவணனிடம் வந்து தன் மூக்கை இழந்ததற்குக் காரணம் கூறு கிறாள். பேரழகியாகிய சீதையை தூக்கிக்கொண்டு வந்து இராவணனுக்கு இன்பம் தரும் பொருளாக ஆக்க முயன்றதாகவும், அப்போது இலட்சுமணன் தன்னை இந்தக் கோலம் செய்ததாகவும் கூறுகிறாள். சீதையைச் சூர்ப்பனகை பலபடியாக வருணிக்கக் கேட்ட இராவணனுக்கு அப்பெருமாட்டியிடம் ஆசை உண்டாகிறது. அவளுடைய உருவத்தை அவன் கற்பனை செய்து கொள்கிறான். காம மிகுதி யால் அவன் மிகவும் துன்பப்படுகிறான். அப்போது அவனுக்கு உருவெளித்தோற்றமாக ஒரு பெண் ணின் உருவம் தோற்றுகிறது. சீதையை அவன் முன்பு பார்த்ததில்லை. ஆனாலும் முன்னால் தோற்று கின்ற பெண்ணின் உருவம் மிக அழகாக இருக் கிறது. அதை அவன் கண்டபோது அவள்தான் சீதையா என்பதைஉறுதிப்படுத்திக்கொள்ள உடனே சூர்ப்பனகையை அழைத்துவரச் சொல்கிறான்.

சீதைசீதை என்று எப்போதும் நினைத்துக்கொண்டிருந்தமையினால் அவனுக்குப் பார்க்கும் இடமெங்கும் சீதையாகத் தோன்றும் நிலை வந்து விட்டது.

இராவணன் ஏவலின்படி சூர்ப்பனகை அங்கே வந்தாள். அவளோ இராமனிடத்தில் தீரா விருப்பம் கொண்டாள். அவள் இராவணனை அணுகிய போது 'இதோபார் இவள்தானா நீ சொன்ன சீதை, என்று அவன் கேட்கிறான்.

''பொய்ந்நின்ற நெஞ்சிற் கொடியாள் புகுந்தாளை நோக்கி
நெய்ந்நின்ற கூர்வாளின் நேருற நோக்கி நங்காய்
மைந்நின்ற வாட்கண் மயில் நின்றென வந்தென் முன்னர்
இந்நின்றவளாங் கொலியம் சீதை என்றான்''

சூர்ப்பனகைக்கு எப்போதும் இராமனுடைய நினைவாகவே இருக்கிறது. இராவணனுக்குச் சீதையிடத்தில் உள்ள ஆசை எத்தனை வலியதோ, அத்தனை வலியது சூர்ப்பனகைக்கு இராமன்பாலுள்ள ஆசை. இராவணன் தான் கண்ட உருவெளித் தோற்றத்தைக் காட்டி, ''இவள்தானே சீதை?''என்று கேட்ட போது சூர்ப்பனகை பார்க்கிறாள். அவளுக்கு அங்கே சீதை தோன்றவில்லை. இராமன்தான் தோன்றுகிறான். உடனே அவள் வியப்பு மீதூர்ந்து ''இவன்தான் அந்த வல்வில் இராமன்'' என்கிறாள்.

''செந்தாமரைக் கண்ணொடும் செங்கனி வாயினோடும்
சந்தார் தடந்தோளொடும் தாழ் தடக்கைகளோடும்
அந்தார கலத்தோடு மஞ்சனக் குன்றமென்ன
வந்தானி வனாகுமவ்வல்வில் இராமனென்றாள்''

வெறும் காமிகளுக்கே மனக்கண்ணிலும் புறத்திலும் இவர்கள் நினைத்த உருவம் தோன்றுமானால் இறைவன்பால் எல்லை இல்லா அன்பு கொண்ட



பக்தர்களுக்குத்தோற்றுவதற்குத்தடைஎன்ன? மனம் என்பது எல்லோருக்கும் ஒன்றுதான். பக்தி உணர்ச்சி மிக்கவர்கள் இறைவனுடைய தியானத்தினால் அவன் திருக்கோலத்தை நினைத்த இடமெல்லாம் காண்பதற்குரிய நிலைமை அடைவார்கள்.

## அக இருள்

நாம் இருட்டில் விவகாரம் நடத்துகிறோம். கண்ணுக்குத் தோன்றுகின்ற இருட்டுத்தான் இருட்டு என்று நினைத்துக்கொள்ளக்கூடாது. அகக் கண் தெரியாமல் செய்கின்ற அஞ்ஞானத்தைப் போன்ற பேரிருள் வேறில்லை. நாமும் ஒருவகையில் குருடர்களே! உலகம் முழுவதும் இருள் நிரம்பி இருக்கிறது. அதனால் ''மா இருள் ஞாலம்'' என்று பெரியவர்கள் சொல்வார்கள். நாம் வாழ்கிற வாழ்க்கை இருட்டு வாழ்க்கை. இருட்டுக் காரியம் திருட்டுக் காரியம். நாம் செய்கின்ற காரியம் அத்தனையும் திருட்டுக்காரியங்களே. இறைவனுடைய திருவருளாகிய செல்வத்தைப் பெறுவதற்குரிய முயற்சிகள் நேர்மையான காரியங்கள். அப்படி அல்லாதன யாவும் அஞ்ஞான இருளில் செய்கிற திருட்டுக்காரியங்களே.

இருட்டிலும் ஒளி இருக்குமானால் பல காரியங்களைச் செய்யலாம். ஆனால் தாமரை மலராது. இரவு நேரத்தில் மின்சார விளக்குப் போட்டுக் கொண்டு வேலை செய்கிறோம். நிலா, அக்கினி முதலியவை

வந்து ஒளி வீசினாலும் தாமரை மலராது. அதுபோலவே சூரியன் முதலிய பெரிய ஒளிகள் ஒளியை வீசினாலும் நமக்கு அக இருட்டுப் போகாது. அந்த இருட்டைப் போக்குவதற்கு ஞானபானுவாகிய ஆண்டவனுடைய திரு அருட்கதிர் வீச வேண்டும். இறைவன் திருவருள் ஒளியிலே அடியார்களின் உள்ளக் கமலங்கள் மலரும். உள்ளத்திலிருக்கிற இருட்டுப் போய்விடும்.

## மாயையைப்பற்றிக் கபீரின் விளக்கம்

மாயையும் நிழலும் ஒன்றே. அரிதாகத்தான் ஒருவன் இதை அறிகிறான். அது பக்தர்களின் பின்னால் திரியும். முன்னால் வந்தால் ஓடிவிடும். மாயை வஞ்சனைக்காரி. எல்லா நாட்டிலும் எல்லார் இடத்திலும் வஞ்சனை புரிந்து கொண்டு திரிகிறாள். எந்த வஞ்சனைக்காரன் இந்த வஞ்சனைக்காரியை வஞ்சித்தானோ அந்த வஞ்சனைக்காரனுடைய கட்டளை எங்கும் செல்லும்.

மாயை இரண்டு பழங்கள் தருகிற மரம். அவைகளை இழந்தாலும் அழித்தாலும் முத்தி கிடைக்கும். சேர்த்து வைத்தால் நரகவாயில்தான். ஒன்று பொன்; அடுத்தது பெண். மாயை இராமனுடையவள். உலகமெல்லாம் அதன் வியாபாரிகள். யாருக்குத் திருவுளச்சீட்டு விழுந்ததோ அவன்தான் அதைச் செலவழிப்பான். பகவானை அடையவிடாமல் நம்மைப் பிடித்திருக்கும் மற்றவை எல்லாம்



மாயை. முக்கியமாகப் பெண்ணாசையும் பொருளாசையுமாம். அவற்றை அழித்துவிடுதல்தான் ஈசுவரனை அடையத் தகுதி பெறும் சரியான இயற்கையான முறை. ராமன் அருள் பெற்றவன்தான் அவ்விதம் செய்வான். மற்றவர் அதைப் பெருக்கிக் கொண்டு திரிவர்.

மாயையைச் சேர்த்துக் குவித்துக் கொண்டு திரிகின்றனர் மக்கள். ஆயிரம் ஆண்டுகள் எல்லாம் செய்து ஒரே முகூர்த்தத்தில் சாகும் அந்த நாளை அறியார். மாயை மோகினி. நல்லவர்கள் உயிரைக் கூட வசப்படுத்திவிடும். ஓடினாலும் விடாது. நிரப்பி நிரப்பி குறையாமல் மேலே மேலே அம்பை வீசும். பொன்; பெண் இவற்றில் ஈடுபட்டு மாயையின் நெருப்பு எரிகிறது. பஞ்சில் நெருப்புப்பட்டால் தப்புவது எப்படி? அரியுடன் சேரவேண்டும். இந்த ஆசை மிகவும் பருத்த சிரமமான ஆசை என்று எனக்கு நன்றாகத் தெரியும். ஹரி, மாயை என்ற பிசாசை நடுவிலே விட்டுவிடுகிறார்.

ஞானச் சூறுவளி வந்தது. பிரமையின் சுவர் தகர்ந்தது. மாயையின் தட்டி பறந்துவிட்டது. ஈசுவர நாமத்தில் அன்பு ஏற்பட்டது. இனிமையை எல்லோரும் உண்கின்றார்கள். அது விஷமாக மாறி உடலில் பரவிவிடுகின்றது. எல்லா வியாதிகளையும் தீர்க்கும் வேம்பை ஒருவரும் சாப்பிடுகிறதில்லை. மாயை ஒரு விசித்திர மரம். புறப்பொருளின்பங்கள் அதன் மூவகைக் குணமுள்ள கிளைகள். அக்குணங்களாவன: (1) கனவில்கூட குளுமை கிடைப்பதில்லை. (2) பழமும் ருசியற்றது. (3) உடலுக்கும் எரிச்சல் ஏற்படும்.

யாருக்கு சுவாமியே நிறம், பெருமை தந்தாரோ அவன் நிறம்மாறிக் கறுக்கிறதில்லை. நாளுக்குநாள்

அவன் சொற்கள் சிரிக்கின்றன. ஒன்றேகால் பங்கு நிறம் ஏறுகின்றது. பெருமை அதிகரிக்கிறது, மாயை - விளக்கு; மனிதன் - விட்டிற்பூச்சி; மயங்கி மயங்கி அதிலேயே விழுகின்ருன். ஏதோ ஓரிருவர் தாம் குருதந்த ஞானத்தின் துணைகொண்டு சாது அல்லது அடியார்தான் கரை ஏறுகிருர்.

செல்கின்றேன், செல்வேன் என்று எல்லோரும் சொல்கிருர்கள். ஆனல் சென்றடைந்தவர் மிகச் சிலரே. ஒன்று பொன், மற்றது பெண். இரண்டும் ஏறமுடியாத கரைகள். இவ்விரண்டின் காரணமாகக் கரை ஏறுவதே இல்லை ஒருவரும். பெண்ணின் நிழல் பட்டாலே பாம்பு குருடாகிறது. பெண்ணுடன் கூடவே இருக்கிருர்களே அவர்கள்கதி என்னவாகும்? பிறர் மனைவி கூர்மையான கத்தி. தொட்டுத் தப்பியவர் அருமை. முழுவதும் தங்கத்தாலாகி இருந்தாலும்கூட அதன் வயிற்றில் புரளாதே.

விளக்கின் அழகைப் பார்த்து விட்டு விட்டில் அதில் எரிந்து எரிந்து சாகிறது. புலனின்பத்தின் அலைகள் அதிகமாக எரியும் போதுகூட அவயவங்களைத் திருப்புகிறதில்லை. அவ்வளவு தன்னை மறந்து அழிகிருர்கள். பாம்புக்கடி, தேள்கடி இவற்றிற்கு மந்திரம் உண்டு. விஷத்தை இறக்கிவிடலாம். பெண்ணின் உறவு தொந்தரவு. நெஞ்சைக் கடித்துத்தின்று விடும். பொன்னையும் பெண்ணையும் பார்த்து நீ உன் நல்ல தன்மையை மறந்துவிடாதே. அவை கிடைப்பது தொலைவது இரண்டும் தொல்லை தருவதுதான். பாம்பு சட்டையை உரித்துவிடுகிறது. அதுபோல் நீயும் அவற்றை ஒதுக்கிவிடு.

முற்றும்.

225
T|124

அச்சுப்பதிவு:
ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகம்
நாவலப்பிட்டி.